# ஜாமக்காரன்

WATCHMAN

காவல்காரன்


VOLUME - 26 ISSUE - 4

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com





**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**உங்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

**CSI சபைகளின் சட்டதிருத்த மசோதாவைப்பற்றிய தீர்ப்பு இம்மாத கடைசியில் வெளிவரும் என்று நினைக்கிறேன்.**

**‘ சட்டதிருத்தம் சரிதான் என்ற தீர்ப்பு வந்தால் பிஷப்,மாடரேட்டர்களின் அதிகாரம் கூடிப்போகும். ஆயர்களுக்கும் அந்த அதிகாரத்தில் பங்கு உண்டு.**

**‘ ஏற்கனவே சட்டதிருத்தம் இல்லாமல் பழைய நிலை இருந்தபோதே CSI சபைகளின் பல சொத்துக்கள் விற்கப்பட்டன. மிஷனரிகள் வாங்கிப்போட்ட சபையும்,சபையை சுற்றியுள்ள நிலங்களும் கொஞ்சம் கொஞ்சமாக சபை மக்களுக்கும் தெரியாமல் பல டையோசிஸ்களில் விற்கப்பட்டதை கேள்விப்பட்டோமே!. அப்படி வெறுமையாக இருக்கும் சபை நிலங்கள் விற்கப்பட்டு கடைகளை ஷாப்பிங் சென்டர்களை கட்டிவிட்டால் சபைக்கு வருமானம் கூடும் என்று சபை மக்களை ஆசைக்காட்டி சபை நிலங்களை விற்று கடைகள்,காம்ப்ளஸ்கள் கட்டி அவைகளை வாடகைக்கு கொடுத்து, ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவ சபைகளின் நிலங்களில் பிராந்தி கடைகள்,ஓட்டல்கள்,தங்கும் விடுதிகள் அதில் தங்குபவர்களின் விபச்சார வியாபாரம் இப்படி இதன்மூலம் கிடைக்கும் வருமானத்திலா சபைகளுக்கு வருமானம் வரவேண்டும்? அதை நம் பரிசுத்த தெய்வம் ஆசீர்வதிப்பாரா?.**

**சபை நிலத்தில் எத்தனை கடைகள் கட்டினாலும் அந்த வருமானம் ஒரு பைசாக்கூட அந்தந்த சபை வளர்ச்சிக்கு என்று கொடுக்கப்போவதில்லை. அத்தனை வருமானமும் CSI டையோசிஸ்க்குதான் போய்சேரும். டையோசிஸ்க்கு கிடைக்கும் பணத்தை விழுங்க என்று டையோசிஸ்ஸில் ஏற்கனவே சிலமுதலைகள் காத்திருப்பதை நாம் அறிவோமே!. ஆலயங்களும், ஆலயசொத்துக்களும் வியாபார ஸ்தலமாக மாறிவிட்டபின் வாடகை தகராறு,அட்வான்ஸ்**

# ஏப்ரல் 2016

**பிரச்சனை, கடைகளை காலிசெய்ய மறுத்தால் ஆகிய பிரச்சனைகளுக்காக சபை கமிட்டி, ஆயர், பிஷப் எல்லாரும் கோர்ட்டுக்குத்தான் படையெடுத்துக்கொண்டிருப்பார்கள்.**

‘ **மேலும் இந்த நிலை தொடர்ந்தால் ஒவ்வொருCSI சபை மக்களும் டையோசிஸ்மேல் வெறுப்புற்று எங்களையும், எங்கள் சபை கட்டிடத்தையும் அதன் சொத்துக்களையும் எங்களுக்கு பிரித்துகொடுத்து விடுங்கள். எங்கள் சபையை நாங்களே நடத்துவது எப்படி? என்று எங்களுக்கு தெரியும்! என்று கூறி CSI டையோசிஸ்ஸில் பல CSI சபைகள் CSI டிரஸ்ட், CSI சினாட் ஐக்கியத்திலிருந்து சபைகள் துண்டுதுண்டாக பிரிந்துபோய்விடும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. இது CSI சபைகளுக்கு நல்லதல்ல.**

‘ **இந்த ஜாமக்காரனில் அந்நியபாஷை குழப்பம்பற்றி ஆரம்ப வரலாறு இதில் எழுதி உள்ளேன். இனி ஒவ்வொரு மாதமும் அந்நியபாஷை குழப்பம் வெளிவரும்.**

‘ **நமது பிள்ளைகளின் பரீட்சைக்காக ஜெபித்தோம்.**

‘ **மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக எனக்கு காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.**

‘ **ஜாமக்காரன் வாசக குடும்பத்துக்காக நாங்கள் ஜெபித்தோம். பலருக்கு கர்த்தர் வாசகர்களின் ஆவிக்குரிய தீர்மானத்தின் அடிப்படையிலும் வசனத்துக்கு கீழ்ப்படிந்ததாலும் அற்புத சுகத்தை அவர்களுக்கு கர்த்தர் அளித்ததை சாட்சி கடிதங்களின் மூலம் அறிந்தேன். சாட்சி கடிதம் எழுதி அறிவித்தவர்களுக்காகவும் தேவன் அவர்களுக்கு கொடுத்த சுகத்துக்காகவும், அவர்கள் குடும்பத்தில் கர்த்தர் செய்த அற்புதங்களுக்காகவும் தேவனை துதித்தோம். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காகவும் ஜெபிக்கிறேன். நீங்களும் தொடர்ந்து ஜெபியுங்கள்.**

‘ **கர்த்தரின் இரண்டாம் வருகையில் நாம் ஒருவரை ஒருவர் சந்திக்கும்வரை தேவ கிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

## முக்கிய அறிவிப்பு:

‘ இமெயில் அனுப்புகிறவர்கள், உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் இமெயிலில் எழுதுங்கள்.

பெரும்பாலான இமெயில்கள் மூலம் வரும் செய்திகளுக்கு நான் என் பியாணத்தில் அல்லது வெளி ஊர்களிலிலிருந்து கடிதம்மூலம் மட்டுமே பதில் அளிக்கிறேன். இது எனக்கு எளிதாக இருக்கிறது.

ஒவ்வொரு வாரமும் ஊழியம் முடித்து வீடு திரும்பியபின் உங்கள் இமெயில்க்கு பதில் அளிப்பதால் உங்களுக்கு பதில் அளிக்க தாமதமாகிறது. எனவே ஜாமக்காரன் வாசகர்கள் இனி இமெயிலில் உங்கள் முழு விலாசத்தையும், தொலைபேசி எண்ணையும், வாசகர் கம்பியூட்டர் எண்ணையும் எழுதுங்கள்.

**NO. 3**

# பெரிய அம்மை நோய்

இந்த முறை நான் என் வாழ்க்கையில் மற்றொரு அதிசயமான சம்பவத்தை பகிர்ந்துகொள்ளப்போகிறேன்.

1969ம் வருடம் **பெரிய அம்மை** வியாதியில் படுத்துக்கிடந்தேன். என் **தலைமுடியெல்லாம்** கட்டிகள்,தலை முதல் உடம்பு முழுவதும் **கொப்புளங்கள்**. என் தாயின் கை **வைத்தியத்தை மட்டும்** கைக்கொள்ள என் தாய் என்னை அனுமதித்தார்.

வைத்தியம் என்றால் வெறும் **உப்பில்லாத அரிசி கஞ்சி** மட்டும்தான் வைத்தியம். வியாதி படுக்கையில் இருந்த நாட்களில், ஒரு நாள் என் அறையில் இருந்த கண்ணாடியில் **என் முகத்தைப்** நான் பார்த்துவிட்டேன். என் முகத்தை பார்த்து நானே பயந்துவிட்டேன், கண்கள் மட்டும் தெரிந்தது. சரீர மற்ற பாகங்கள் எல்லாம் பெரிய பெரிய **கொப்புளங்களாக,** காணப்பட்டு **முகம் விகாரமாக** இருந்தது. தலை முதல் கால் வரை கொப்புளங்கள் எனக்கு தெரியும்!. **பெரிய அம்மை** (Small pox) வியாதி வந்தால் **என் முகமெல்லாம்** குழிவிழுந்துபோகும். அந்த **தழும்புகள்** ஒரு நாளும் மறையாது முகம் கோரமாக காணப்படும் என்பதை அறிவேன்.

ஆகவே என் அறையில் தனியாக முழங்கால்படியிட்டு அழுதேன். ஏன் ஆண்டவரே? எனக்கு ஏன் இந்த வியாதி வந்தது. நான் மனம் திரும்பி இரட்சிக்கப்பட்டவன் அல்லவா? அப்படியிருக்க ஏன் எனக்கு இந்த **குழி விழுந்த கோர முகத்தை** அனுமதித்தீர்? என்று அழுதேன். எவ்வளவு நேரம்அழுதேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

அது **பகல் நேரம்,** அந்த பகல் வெளிச்சத்தின் மத்தியில் திடீரென்று என் அறையில் **சூரிய வெளிச்சத்தைவிட பிரகாசம்** உண்டானது. பிரகாசஒளி எந்த பக்கத்திலிருந்து வருகிறது என்று எனக்கு தெரியவில்லை. கொஞ்ச நேரத்தில் ஒளியோடுகூடவே **இரண்டு கால்கள்** என்னை நோக்கி நடந்து வந்தது. கொஞ்சம் கொஞ்சமாக **இடுப்பு வரை** அந்த உருவத்தை பார்த்தேன். **கால்களில் உள்ள ஆணி தளும்புகளை** கண்டபின்தான் அது என் நேசர் **இயேசு** என்று அறிந்தேன். **அது சரீரமா? அல்லது தரிசனமா?** அல்லது **சொப்பனமா?** என்று விளங்கவில்லை என்றாலும் நான் சாஷ்டாங்கமாக விழுந்து அவரை நமஸ்கரித்தேன்.

## இயேசுவை நேரில் பார்க்க முயன்ற ஆரம்ப சம்பவம்:

மேலே வாசித்த சம்பவத்தின் முழுவிவரம் அறியமுன், அதாவது அந்த **அம்மை வியாதி** எனக்கு **உண்டாகும்முன் பக்குவம் அடையாத** என் ஆவிக்குரிய ஆரம்ப காலத்தில் முட்டாள்

தனமான என் முயற்சியை நீங்கள் அறிய வேண்டும். நான் இரட்சிக்கப்பட்ட புதியதில் **சாது சுந்தரசிங்** போன்ற சிலரின் வாழ்க்கை சரித்திரத்தை வாசித்ததால் இயேசுவை **முகமுகமாக** காணவேண்டி ஆசைப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள **குற்றாலம்** என்ற மலையில் ஒரு பெரிய மரத்தில் ஏறி அமர்ந்து, ஒரு பகல் ஒரு ராத்திரி முழுவதும் ஜெபித்து இயேசுவை நேரில் பார்க்கவேண்டும் என்ற என் ஆவலை கர்த்தரிடம் அறிவித்தேன். (கீழே மிருகங்கங்களின் பயத்தால்தான் பிரமாண்டமான மரத்தின் மீது ஏறி அமர்ந்தேன்). மறுநாள் விடியற்காலை இயேசுவை பார்க்க வேண்டும் என்ற வெறி எனக்குள் இன்னும் அதிகமானது. தண்ணீர்கூட பருகாமல் மரத்தில் இருந்து இறங்காமல் பிடிவாதமாக ஜெபித்துக் கொண்டிருந்தேன்.

**இரண்டாவது** நாள் பகலில் திடீரென்று பெரும் காற்று உண்டானது. அதன் மத்தியில் **மெல்லிய சத்தம்** கேட்டேன். அதுவும் அந்த சத்தம் என் **உள்ளத்திலிருந்து** எழுந்ததா? அல்லது உண்மையான **மனுஷ சத்தம்தானா?** என்று குழம்பினேன். காரணம், அப்போதுதான் நான் பேசக் கேட்டது வேத **வசனமாக** இருந்தது. அந்த வார்த்தை தோமாவிடம் இயேசு பேசியதாகும். ஆகவேதான் அந்த சந்தேகம் எனக்குள் எழுந்தது.

**கண்டு விசுவாசிக்கிறவனைவிட காணாமல் விசுவாசிக்கிறவனே அதிக பாக்கியவான்** என்பதாக அந்த சத்தம் கேட்டது. முதன்முதல் என் வாழ்க்கையில் நான் **கர்த்தரின் சத்தம்** கேட்டேனே என்று என் மனம் சொல்லமுடியாத அளவு சந்தோஷம் அடைந்தது.

இது போதும் ஆண்டவரே! என்று மனம் திருப்தியடைந்தது. அதற்கு பிறகு மரத்திலிருந்து இறங்கி **குற்றாலம்** ஊருக்குள் சென்று ஆகாரம் சாப்பிட்டு என் சொந்த ஊரான சேலம் திரும்பினேன்

' இந்த சம்பவத்துக்கு பின்தான் சுமார் ஒன்றறை வருடங்கள் கழித்து நான் **பெரிய அம்மை வியாதியால்** பாதிக்கப்பட்டு படுத்துகிடந்த என் படுக்கையறையில் மேலே எழுதிய அந்த சம்பவம் நடந்தது. அன்று **இயேசுவை காண** குற்றால மலையில் ஜெபித்து இரண்டு நாட்களை மரத்தின்மேல் அமர்ந்திருந்தேன். அன்று குற்றாலம் மலையில் காற்றினிடையே கேட்ட அந்த சத்தத்துக்குபின் இனி **இயேசுவை நேரில் முகமுகமாக காணவேண்டும்** என்ற **என் ஆசையை என் உள்ளத்திலிருந்து நீக்கினேன்.** ஆனால் இன்றோ **நான் கேட்காமலே,** நான் எதிர்பாராமலே இயேசு கிறிஸ்துவின் மகிமை என் வீட்டிற்கே அவரின் **சாயலில்** வந்தது. எனக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது. அன்று கண்ட இயேசுவின் உருவம் **இடுப்பிலிருந்து கால் அளவு** வரை கண்ட அந்த உருவத்தைத்தான் என் **பத்திரிகையின் அட்டைப்பட முகப்பில்** நான் வரைந்து வைத்தேன். இனி அந்த பகல் நடந்த சம்பவத்தை கூறுகிறேன். கர்த்தருக்கு முன்பாக சாஷ்டாங்கமாக விழுந்த என்னை, என் கர்த்தர் தூக்கி எடுத்து நிறுத்தினார்!. **அன்று நான் வீட்டில் கண்டது தரிசனமா, மனதில் தோன்றிய கற்பனை உருவமா. மகிமையின் சரீரமா** என்பதை என்னால் கூற இயலவில்லை.

இந்த விவரிக்க முடியாத சந்தோஷ சம்பவம் என் வீட்டில் என் படுக்கை அறையில் நடந்தது. நான் கண்டது எப்படிப்பட்ட தோற்றமாக இருந்தாலும் **என் இயேசு** இந்த கேடுகெட்ட பாவியை காண **என் அறைக்கே** வந்த அந்த அனுபவத்தை, அந்த **அன்பை** எப்படி விவரிப்பேன்!. என்னைவிட **பக்திமான்களும்,பரிசுத்தவான்களும்** கர்த்தரை காண வருடக்கணக்கில் காத்திருக்க, சேலம் வீதிகளில் தெரு நாயைபோல சுற்றித்திரிந்த என்னை, பாவத்தை பச்சை தண்ணீர்போல் பருகின என்னை, காண என் வீட்டுஅறைக்கே அவர் வந்து, தன்னை எனக்கு

வெளிப்படுத்தினாரே!, கர்த்தருக்கே மகிமை!. அவர் பிரசன்னத்தை உணர்ந்தபோது அவர் என்னை **தொட்டதுபோல்** உணர்ந்தேன். நான் **முகங்குப்புற** அவர் காலில் விழுந்தேன். எனக்காக அடிக்கப்பட்ட அந்த **தழும்புள்ள** கையால் என்னை தூக்கி எடுத்ததைபோல் உணர்ந்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் என்னை ஆசீர்வதித்தார்.

அந்த சமயத்தில் என் உள்ளத்தில் ஒலித்தது.. மகனே உன்னை நான் நேசிக்கிறேன். நீ எனக்காக வருவாயா? உன்னை நான் எனக்காக ஒரு **விசேஷமான ஊழியத்துக்காக** உபயோகிக்கப்போகிறேன் என்றார்.

**குறிப்பு:** நான் **அம்மை வியாதி** படுக்கையில் **இயேசுவை கண்டதும்**, மூணாறில் **பிசாசை கண்டதும்** வேத **புத்தகத்தில் இல்லாதது.** ஆகவே அதை நான் எப்படி பார்த்தேனோ அதை அப்படியே எழுதாமல் ஜாமக்காரனில் எழுதும்போது முழுவதுமாக அந்த நிகழ்ச்சியை விவரிக்கவில்லை. அப்படியே பொதுகூட்டங்களில் நான் பேசும்போதும் அவைகளை விவரிப்பதில்லை. அது வேத அடிப்படையில்லாத என் **சொந்த அனுபவம்** ஆகும். வேத புத்தகத்தை சார்ந்து நமக்கு ஏற்படும் அனுபவங்களை மட்டுமே மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்ளலாம். வேத புத்தக அடிப்படையில்லாதவற்றை அது நமக்காக ஏற்பட்ட அனுபவம் என்று நமக்குள் வைத்து தேவனைத் துதிக்கலாம்.

எனக்கு ஏற்பட்ட அந்த இரண்டு அனுபவங்களையும் ஜாமக்காரனை வாசிப்பவர்களுக்கு தங்களுக்கும் அப்படிப்பட்ட அனுபவம் ஏற்படவேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகவும், என் அனுபவத்தை வாசிப்பவர்கள் பின்பற்றிவிடக்கூடாது என்பதற்காகவும் நான் கண்ட முழு அனுபவத்தையும் நான் ஜாமக்காரனில் எழுதவில்லை.

அன்று பகலில் கர்த்தர் எனக்கு அளித்த அந்த காட்சியின் சமயத்தில் மேலும் அவர் கூறியதாவது: நீ எங்குபோனாலும் உனக்காக **தனிசபையை** உண்டாக்காதே! உனக்காக எந்த **ஸ்தாபனத்தையும் உண்டாக்காதே! எங்குப்போனாலும் என்னை குறித்து மட்டுமே** பேசவேண்டும் என்றார்.

' அதனால்தான் 1989ம் வருடம் என் மனைவி, என் பிள்ளைகளின் காணிக்கைகளை கொண்டு என்னை மிகவும் நேசிக்கும் 4 நபர்கள் கொடுத்த காணிக்கைகளை கொண்டும் தமிழ்நாட்டில் நான் பல மாதங்கள் தொடர்ந்து ஊழியம் செய்த 3 கிராமங்களின் ஊழியத்தின் பலனாய் கிடைத்த **ஆத்துமாக்களுக்காக** அந்த மூன்று கிராமங்களிலும் நிலத்தை விலைக்கு வாங்கி, ஆலயங்களை கட்டி எழுப்பி அங்கு **ஊழியர்களையும்** நியமித்து, இப்போதும் அந்த இடங்களில் ஆராதனை சிறப்பாக நடக்கிறது. இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால் மூன்று கிராம சபைகளுக்காக **நிலம்** வாங்கிய **பத்திரங்களிலோ,** அந்த ஆலய **திறப்புவிழா கல்வெட்டிலோ** என் **பெயரோ** என் குடும்பத்தில் உள்ள யாருடைய **பெயரும் அதில் எழுதப்படாமல்** பார்த்துக்கொண்டேன். அந்தந்த கிராம மக்களுக்காக எழுப்பப்பட்ட அந்த ஆலயத்துக்காக வாங்கப்பட்ட நிலம் வாங்கிய **பத்திரத்தில்** அந்தந்த சபைகளில் ஞானஸ்நானம் எடுத்து அங்கத்தினரானவர்களின் பெயர்களில் நிலம் வாங்கினேன். அவர்கள் பெயரில் பத்திரங்கள் எழுதப்பட்டு அந்தந்த **சபையின் பெயரிலேயே** நிலம் விலைக்கு வாங்கி நிலம் **ஆலயம்** யாவையும் **அரசாங்க ரிஜிஸ்டர்** அலுவலகத்தில் முறைப்படி சபையின் பெயரிலேயே பத்திரப்பதிவு செய்தேன். **என் பெயரில் எனக்கென்று** எந்த **சபையும், ஸ்தாபனமும்** இன்றுவரை

கிடையாது. அன்று முதல் இன்று வரை என் ஊழியத்தை ஆண்டவர் ஆரம்பத்தில் என்னை எப்படி உணர்த்தினாரோ அதன்படியே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன். (என் கர்த்தர் எனக்கு இட்ட கட்டளைகளை நிறைவேற்றி முடித்தேன்).

அதன்பின் என்னைவிட்டு இயேசுகிறிஸ்துவின் பிரசன்னம் மெல்ல மறையும்போது, மேலும் அவர் கடைசியாக என்னிடம் கேட்டுக்கொண்ட மூன்று கட்டளைகள்!.

1. **என்னை மட்டும் திருப்திபடுத்து!. சங். 143:10**
2. **எனக்கு மட்டும் பயப்படு!**
3. **என்னை மட்டும் எப்போதும் ஸ்தோத்திரம் பண்ணு!**

இந்த கண்டிப்பான, அதே சமயம் அன்பான அந்த கட்டளைகளை எனக்கு உபதேசித்தபின் கொஞ்சம் கொஞ்சமாக அவர் பிரசன்னம் மறைந்துபோனது. அவர் எனக்குள் உபதேசித்தது யாவும் அவர் நமக்கு கொடுத்த **வேத புஸ்தகத்தில் உள்ளனவைதான்.**

## முதல் அற்புத சுகம்:

அவர் பிரசன்னம் என் அறையைவிட்டு மறைந்தபின் திடீரென்று என் தலையிலிருந்து கால்வரை நெருப்புபோல் உடல் முழுவதும் **சூடு ஏறியது.** என்ன செய்வது என்று தெரியவில்லை!. அம்மைவியாதி அதிகமாகபோகிறதோ என்று பயந்தேன். சற்று நேரத்தில் நான் நின்ற இடத்தை சுற்றிலும் **சாம்பலைபோல்** என் சரீரத்தின் கொப்புளங்களிலிருந்து தோல்கள் **துாள்களாக** விழுந்துகிடந்தன. அந்த **தோல் உரிந்து விழும்** கட்டம்தான் **அம்மைவியாதி** மற்றவர்களுக்கு பரவும் நேரம் ஆகும். அந்த சமயத்தில் வியாதியஸ்தரை காணவரும் மற்றவர்களுக்கு தொற்று நோயாக ஒட்டிக்கொள்ளும். அதனால்தான் கிராமங்களில் அம்மைவியாதியின் அந்த குறிப்பிட்ட கட்டத்தில் யாரையும் வீட்டில் அனுமதிக்கமாட்டர்கள்.

ஆகவே நான் ஒரு துணி எடுத்து அதை தண்ணீரில் நனைத்து **தரை முழுவதையும்** துடைத்து சுத்தம் செய்து, சரீரத்திலிருந்து விழுந்த தூள்களை தரையிலிருந்து நீக்கினேன். உடனே நானும் போய் குளித்தேன். 21 நாட்கள் ஆகும்முன் **அம்மை வியாதியஸ்தர்கள்** குளிக்கக்கூடாது என்பது கிராம வைத்தியத்தின் கட்டளை ஆகும். ஆனால் நான் அதற்கு முன்பே குளித்து விட்டேன். உடலை துடைத்தபின் கண்ணாடியில் என் முகத்தை பார்த்தேன். என்ன ஆச்சரியம் அம்மை கொப்புளங்களின் **ஒரு தழும்பும்,குழியும்,அடையாளமும் என் முகத்திலோ, உடலிலோ எங்கும் இல்லை.** என் சரீரம் சாதாரண உடம்பாக சாதாரண முகமாக காணப்பட்டது. அப்படியே முகம் பார்க்கும் கண்ணாடிமுன் முழங்கால் படியிட்டு தேவனை துதித்தேன். எனக்கு அற்புதம் சுகம் அளித்த தேவனை வாயார, மனமார துதித்தேன். என் அறையின் கதவை திறந்து நேரே என் தாயின்முன் வந்து நின்றேன். உடனே என் அம்மா கோபத்தோடு உன்னை அறையை விட்டு வெளியே வரக்கூடாது என்றேனே! என்று அம்மா ஏசினார். உடனே நான் அம்மா, என்னை நன்றாக பாருங்கள் அம்மை வியாதி உண்டானதற்கான அடையாளம் ஏதாவது என் சரீரத்தில் காண்கிறீர்களா? என்றேன். அம்மா மிகவும் ஆச்சரியப்பட்டு எப்படி?என்ன நடந்தது? என்றார்.

என் அறையில் நடந்ததை அம்மாவிடம் விவரித்தேன். அம்மா மிகவும் சந்தோஷப்பட்டார். என் **தேவன் எத்தனை நல்லவர்.** அம்மை வியாதி வந்ததின் ஒரு தழும்போ, அடையாளமோ எதுவும் காணப்படாதவாறு **பூரண சுகம்** எனக்கு அளித்த அந்த **அற்புத நாளை.** அந்த அற்புத

**பகல்வேளையை** என்னால் இப்போதும் மறக்கமுடியவில்லை!. **நினைக்கும்போதெல்லாம்** துதிக்கிறேன். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக. இந்த அனுபவத்தை அன்றைய காலங்களில் என் சாட்சியில் எல்லா ஊர்களிலும் கூறினேன். எனக்கு ஆவிக்குரிய முதிர்ச்சியும்,வசன தெளிவும் ஏற்பட்டபின் அந்த அனுபவத்தை இப்போது நான் எங்கும் கூறுவதில்லை. காரணம்! இது **வேத வசன** அடிப்படையல்ல!.

எனக்கு ஏற்பட்டது **என் சொந்த அனுபவம்** ஆகும். என் சாட்சியை கேட்டு யாராவது என்னைபோல் இயேசுவை பார்க்க **குற்றலாம்** மலைக்கு செல்ல முயற்சி செய்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான், இந்த அனுபவங்களை இப்போது கூறுவதில்லை. இயேசுவை காண நாம் ஆசைப்படுவதைவிட **இயேசு நமக்குள் வாசம்** செய்வதை **உறுதிபடுத்திக்கொள்வதுதான்** வேத வசன உபதேசம் ஆகும்.

' இயேசுகிறிஸ்து மரித்து, உயிர்தெழுந்தபின் இயேசுவின் சீஷர்கள் யாரும் இயேசுவை மறுபடியும் **நேருக்குநேர்** கண்டதாக வேதம் கூறவில்லை. பவுலும் தன் சாட்சியை கூறும்போது **ஞானதிருஷ்டியில்தான்** இயேசுவை கண்டதாக பதிவு செய்துள்ளார். அப் 22:17.

இயேசுகிறிஸ்து பரமேறியபின் நேருக்குநேர் சீஷர்கள் யாரும் இயேசுகிறிஸ்துவை பார்க்கவில்லை. இயேசுவை பிரத்யட்சமாக **நான் தினசரி காண்கிறேன்** என்று கூறுகிறவர்கள் எல்லாருக்கும் அது **அவர்களுக்கு உண்டான கற்பனை அனுபவமாக** இருக்கலாம்.

## பிசாசைக் கண்டேன்

**பிசாசை நேருக்குநேர்** காண்பது என்பதும் **வேத வசன அடிப்படையல்லாததால்** அதனால் மூணாறில் நான் பிசாசை கண்டதை இங்கு விவரிக்க நான் விரும்பவில்லை. பலர் அதை வாசித்து அல்லது நான் கூறுவதை கேட்டால் **பிசாசு** உருவம் இப்படித்தான் இருக்கும் என்று ஜாமக்காரன் வாசகர்கள் எல்லாரும் நான் கண்ட உருவத்தைப்போலவே கண்டதாக கற்பனை சாட்சி உருவாக்கிவிடுவார்கள்.

**தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கும்** என்று நீதி 5:3 கூறுவதைப்போல் நாம் எதை கேட்கிறோமோ, எதை வாசித்து அதில் முழு எண்ணத்தையும் நம்பிக்கையும் வைக்கிறோமோ அதை (உள்மனசாட்சி)சப்கான்ஷியஸ் உள்வாங்கி கொள்ளும். அதன்பின் அதே உருவத்தை,அதே தோற்றத்தை பலரும் நேரில் கண்டதாக கூற தொடங்கிவிடுவார்கள். ஏதேன் தோட்டத்தில் பாம்பு உருவத்தில் பிசாசு ஏவளோடு பேசினான் என்று வாசிப்பதால் இன்னும் பல கிறிஸ்தவர்கள் பாம்பை சொப்பனத்தில் கண்டால் **பிசாசை கண்டேன்.** அது அடிக்கடி பாம்பு உருவத்தில் என்னை தொல்லைப்படுத்துகிறது. சிலர் குரங்கு உருவத்தில் **பிசாசு** என்னை இரவில் தொல்லைப்படுத்துகிறது என்று கூறத் தொடங்கிவிடுவார்கள். பாம்பு பிசாசாக இருந்தால் இஸ்ரவேல் மக்கள் கீழ்ப்படியாமையால் தண்டிக்கப்பட்டு பாம்பினால் கடிப்பட்டு மக்கள் செத்தார்கள். அவர்கள் மனந்திரும்பியவுடன் அதே பாம்பை **வெங்கலத்தில் உருவம்** அமைத்து அதை ஒரு கோலிலே இஸ்ரவேல் மக்கள் மத்தியில் கர்த்தரே நடசொல்லி அந்த **வெங்கல சர்ப்பத்தை கண்டவர்களுக்கு பாம்பு** கடியிலிருந்து பிழைக்கும் ஏற்பாட்டை செய்வாரா?.

' இந்த நிகழ்ச்சிக்கு பிறகு சில மாதங்கள் கழித்து பிசாசின் சாயலையும்,கிரியையும் நான் நேரில் காணும் சூழ்நிலை ஏறப்பட்டது. கேரளா மாநிலத்தில் **மூணாறு** என்ற மலை

வாசஸ்தலத்தில் நடைபெற்ற மலையாள பாஷை பேசும் CSI & மார்தோமா சபைகளின் ஒரு பெரிய கூட்டத்தில் பேச அழைக்கப்பட்டு இருந்தேன். அங்கு நான் தங்குவதற்கு காட்டுக்குள் மிக பழமை வாய்ந்த ஒரு **மிஷனரிகள் குடியிருந்த ஒரு பெரிய மர பங்களாவை** ஏற்பாடு செய்திருந்தார்கள்.

' அப்படி தங்கி ஊழியம் செய்த நாட்களில் தான் மூன்றாம் நாள்இரவு அந்த நிகழ்ச்சி நடந்தது. என் இந்த அனுபவத்தை படிக்கும்முன் **பிசாசு** பற்றிய சில காரியங்கள் நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகிறேன்.

## பிசாசு என்பவன் யார் ?

ஆதியில் வானத்தையும் பூமியையும் சகல சிருஷ்டிகளையும் படைத்த தெய்வமான பிதாவானவருக்கு கீழே பணிவிடை செய்ய மூன்று **பிரதான தூதர்களும்** அவரவர்களின் கூட்டங்களும் இருந்தன.

முதல் தூதனுக்கு **லூசிபர்** என்றும் இரண்டாம் தூதனுக்கு **மிகாவேல்** என்றும் மூன்றாம் தூதனுக்கு **காபிரியேல்** என்றும் அவர்கள் அழைக்கப்பட்டார்கள். நான் விளக்கமாக கூற நேரமில்லாததால் சுருக்கமாகவேஅவர்களில்ஒருதூதனைப்பற்றி மட்டும் அறிமுகப்படுத்துகிறேன்.

முதல் தூதன் பெயர் **லூசிபர்** இவன் எல்லா தூதர்களுக்கும் முதன்மை ஸ்தானம் பெற்றவனாக இருந்தான். அவன் **பூர்ண அழகுள்ளவன்** என்று வேதம் வர்ணிக்கிறது. கர்த்தர் உலகத்தை உண்டாக்கியபோது இந்த லூசிபர் என்ற தூதனின் உள்ளத்தில் சில விபரீத எண்ணங்கள் உண்டாயின. ஏசா. 14:11-15. வேதம் சொல்கிறது. அவனுக்குள் **பெறுமை** என்ற எண்ணம் தோன்றலாயிற்று. பெறுமை கொள்பவனை உலக தோற்றம்முதலே கர்த்தர் வெறுக்கிறார். மேலும் அவன் **நான் தெய்வத்துக்கு சமமானவன்** என்றான்.

கர்த்தர் தூதர்களை சிருஷ்டிக்கும்போதே அவர்களுக்கு **அற்புதங்களை செய்யும்** சக்தியையும் அளித்திருந்தார். ஆகவேதான் **லூசிபர் தூதனின்** உள்ளத்தில் கடவுளுக்கு மட்டும் அற்புதம் செய்ய முடியுமா? எனக்கும் அற்புதம் செய்யமுடியுமே? என்ற இந்த எண்ணத்தின் அடிப்படையில் **நான் கடவுளைப்போல** ஆவேன். **கடவுளுக்கு சமமாவேன்** என்ற பெருமை எண்ணம் இவனுக்கு உண்டானது. ஏசா. 42:8ல் கர்த்தர் கூறுகிறார். **நான் கர்த்தர், இது என் நாமம். என் மகிமையை வேறொருவனுக்கும் கொடேன். என் துதியையும் வேறு யாருக்கும் கொடேன். நானே கர்த்தர் என்னையன்றி உனக்கு வேறே தேவ தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்** என்றெல்லாம் எச்சரித்துள்ளார். லூசிபர் தூதன் எப்போது தேவனுக்கு விரோதமான சிந்தனைகளை தன் உள்ளத்தில் சிந்தித்தானோ! அப்போதே கர்த்தர் அவனை பரலோகத்திலிருந்து நீக்கினார். அவன் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான். அவனோடு அவன் கூட்டத்தையும் தள்ளவிட்டார்.

நம் தேவன் நம்முடைய உள்ளத்தை அறிகிற தேவன் மனுஷன் முகத்தை மட்டும் பார்ப்பான். தேவனோ **இருதயத்தை** பார்க்கிறார். **நேபுகாத் ராஜா** ஒரு நாள் தனக்குள் பெறுமையாக யோசித்து இப்படி சொன்னான். **என் வல்லமை, என் மகிமை, நான் கட்டினது** என்ற வார்த்தைகளை உச்சரித்தான். வசனம் சொல்லுகிறது. தானி. 4:31. இந்த வார்த்தை **ராஜாவின் வாயில்** இருக்கும்போதே **ராஜ்ய பாரம்** உன்னைவிட்டு நீங்கிற்று என்ற சத்தம் வானத்தில் இருந்து வந்தது. உடனே ராஜ்ய பாரம் அவனைவிட்டு நீங்கியது. மனுஷலிருந்து தள்ளப்பட்டான்.

' அதே சமயம் மற்றொரு பக்கம் **தன்னை தாழ்த்திய** ஜெயில் கைதியாக வாழ்ந்த **தானியேல்** என்பவனை நோக்கி, அதே தெய்வம் கூறும் வாசகம் என்ன என்று கவனியுங்கள். பிரியமான புருஷனாகிய **தானியேலே** நீ வேண்டிக்கொள்ள தொடங்கியபோதே **கட்டளை** வெளிப்பட்டது என்றார். இது எத்தனை பெரிய ஆசீர்வாதம். தாழ்மை உள்ளவனுக்கு கர்த்தர் **கிருபை** அளிக்கிறார் என்று வேதம் கூறுகிறது.

# பெருமை:

சில ஊழியருக்குள் தங்களை குறித்து உயர்வான எண்ணம்மூலம் அவர்களுக்குள் பிசாசுக்கு உண்டான அந்த பெருமை குடிக்கொள்கிறது.

சில சபைகள் தங்களுக்குள்ள பிழையான ஆவியின் நிறைவும் என்று கூறிக்கொள்ளும் பெருமையால் தன் **சபை அங்கத்தினர்** அல்லாத வேறு சபையில் உள்ள எல்லாரையும் அற்பமாக நினைப்பார்கள். இந்த பெருமை இவர்களில் கிரியை செய்ய ஆரம்பிக்கும்போது அது **பொறாமையாக** மாறிவிடுகிறது. அகவேதான் கர்த்தர் பெருமையை சுபாவத்தை கடுமையாக வெறுத்தார், விளைவு **லூசிபர்** என்ற அந்த தூதனும் அவனோடு சேர்ந்த தூதர்களும் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டார்கள். இப்படி தள்ளப்பட்ட இந்த தூத கனங்கள் தான் **பிசாசு** என்று வர்ணிக்கப்படுகிறது.

## அந்த பிசாசுகளின் வேலைகளாவன :

பிசாசின் மிக முக்கிய வேலை கடவுளிடமிருந்து மனிதனை பிரித்துவிடுவது. அதற்கு முதலில் பலியானவள் திருமதி **ஏவாள்** ஆகும். கணவன் மனைவியை பிரிப்பது விவாகரத்து என்பது தவறு இல்லை என்ற எண்ணத்தை உள்ளத்தில் உருவாக்குவது இதெல்லாம் பிசாசின் செயலாகும். **ஜெபிக்கும்** மக்களை ஜெபிக்காமல் இருக்கும்படி செய்வது. **உபவாசிக்கும்** மக்களை உபவாசிக்காமல் இருக்கசெய்வது, **ஊழியம்** செய்யும் ஊழியக்காரர்களை **தடைசெய்வது** இப்படி தெய்வத்தை விட்டு மக்களை எந்த அளவு **பிரிக்கமுடியுமோ** அந்த அளவு மிகவும் வேகமாக கிரியை நடப்பிக்கிறான். சிலருடைய கேள்வி கர்த்தர் ஏன் இவனை உடனே தடைசெய்யக் கூடாது என்பதாகும். கர்த்தர் இவனை விட சக்தி உடையவர் அல்லவா?. பின்னே ஏன் பிசாசை அழிக்கக்கூடாது என்ற கேள்வி பலரின் உள்ளத்தில் எழுகிறது.

ஆம். கர்த்தர் பிசாசைவிட **சக்தி உள்ளவர்தான்** அதில் சந்தேகமே வேண்டாம். ஆனால் இப்படிப்பட்ட விஷயத்தில் அவருக்கென்று ஒரு **திட்டம்** அவருக்கென்று ஒரு **நோக்கம் அவருக்கென்று ஒரு வழி** உண்டு. அதோடு அவருக்கென்று ஒரு **காலம்** உள்ளது. அவர் பிசாசை முற்றிலுமாக அழிப்பார். ஆனால் அவனை அழிக்க ஒரு காலத்தை நிச்சயித்து வைத்து இருக்கிறார். அது வரை அவரின் செயல்கள் தொடரும். நாம் நினைக்கிற மாதிரி கர்த்தர் செய்வதில்லை. அதனால்தான் கர்த்தர் **உன் வழி என் வழிகள் அல்ல உன்** நினைவுகள் என் நினைவுகள் அல்ல என்றார். அப்படியே அவருக்கென்று ஒரு **காலம்** உண்டு. பிசாசை அழிக்க ஒரு குறிப்பிட்ட நேரமும் வைத்து இருக்கிறார். ஆம். அவர் எல்லாவற்றுக்கும் ஒரு நாளை குறித்துவைத்து உள்ளார் என்று வேதம் கூறுகிறது. அதை அவருடைய வேளை என்று நம் வேதம் வர்ணிக்கிறது. கானான் ஊர் கல்யாணத்திலே திராட்சை ரசம் குறைந்தபோது இயேசுவினடம் அவசரமாக ஒரு அற்புதத்தை எதிர்பார்த்தார்கள். ஆனால் இயேசுவோ என் **வேளை** இன்னும் வரவில்லை என்று கூறினார். அந்தபடியே பிசாசை அழிக்கவும், கர்த்தர் ஒரு

அந்தபடியே பிசாசை அழிக்கவும் கர்த்தர் ஒரு நாளை குறித்துவைத்துள்ளார். அந்த குறிப்பிட்ட நாள் வரை அந்த பிசாசை அழிக்கமாட்டார். அப்படியே விட்டுவைத்துள்ளார். குறிப்பிட்ட காலம் வரும்போது **அவனுக்காக ஆயத்தம்** பண்ணப்பட்ட **நரகம்** என்ற பயங்கர வேதனை உள்ள இடத்தில் **அவனை தள்ளிவிடுவார்.**

உண்மையில் **நரகம்** என்பது **பாவம் செய்த மனிதர்களுக்காக** நியமிக்கப்பட்டதாக பலர் தவறாக எண்ணுகிறார்கள். **நரகம்** மனிதனுக்காக நியமிக்கப்பட்டதல்ல. அது **பிசாசுக்காகவே** ஆயத்தம் பண்ணப்பட்டது. மத். 25:41ல் பிசாசுக்காகவும் அவன் **தூதர்களுக்காகவும்** ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினி என்று இயேசு கூறினார். ஆனால் பிசாசின் காரியங்களுக்கும் கிரியைகளுக்கும் உடன்பட்டு பாவம் செய்கிற ஜனங்களை அவனோடு சேர்த்து நரகத்தில் தள்ளுவார் என்று வேத வசனம் மூலம் அறிகிறோம்.

' தான் தெரிந்தெடுத்த **சீஷர்களையே** பார்த்து உங்களில் ஒருவன் **பிசாசாக இருக்கிறான்** என்று இயேசு கூறினார். யாரைக்குறித்து இப்படி சொன்னார் என்று நம் எல்லாருக்கும் தெரியும். 30 வெள்ளிக்காசுக்கு தன்னை காட்டிக்கொடுக்கப்போகிற **யூதாஸ்** காரியூத்தை குறித்து அப்படி சொன்னார்.

**யூதாஸ் பிசாசு அல்ல. பிசாசின் திட்டத்துக்கு** தன்னை இசைந்து கொடுத்து செயல்பட்டான்.

**பிசாசு** ஒருவனுக்குள் புகாமல் **பிசாசின் செய்கைக்கு ஒத்த சுபாவம்** ஒருவனுக்குள் இருந்தாலே **அவனையும் பிசாசு** என்று இயேசு கூறினார். யோ. 8:43.ஐயும் வாசித்துப்பாருங்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் **சிலுவையை** சுமக்கவும் கஷ்டங்களை **சகிக்கவும்** பிரியப்படாத **பேதுருவை** பார்த்துக் **பின்னாக போ சாத்தானே.** மத். 16:23,24 என்று கடிந்துகொண்டாரே!.

இயேசு பிசாசு என்று குறிப்பிட்ட **யூதாஸ்காரியூத், பேதுரு** ஆகிய இருவரும் **பிசாசு அல்ல.** ஆனால் பிசாசின் கிரியை, செய்கைகள், எண்ணம் இவைகள் இவர்களுக்குள் இருந்ததால் அவர்களை **பிசாசு** என்றும், **சாத்தான்** என்றும் வர்ணித்தார்.

**சிலுவை வழி** வேண்டாம் என்ற கூறிய **பேதுருவை** பிசாசு என்றார். ஆகவே இப்போதுள்ள செழிப்பு உபதேசத்தை போதிக்கும் எல்லா அற்புத ஊழியர்களம் **சிலுவை பாதை** வேண்டாம் என்று கூறுகிற எல்லா ஊழியர்களையும் நாம் பிசாசு என்று தைரியமாக கூறலாம்.

மேலும், வேதமும் **பிசாசினுடைய கிரியைகளை** அழிக்கும்படிக்கே **தேவனுடைய குமாரன்** வெளிப்பட்டார். 1 யோ. 3:8 என்று தெளிவாக கூறுகிறது.

இந்த வானத்தில் **பிசாசை அழிக்க** தேவ குமாரன் **வெளிபடவில்லை என்பதை கவனிக்கவும்.** பிசாசின் **கிரியைகளைதான் அழிக்க** தேவ குமாரன் வெளிப்பட்டார்.

பிசாசின் செய்கையில் விழாமல் இருக்கத்தான் கர்த்தர் நமக்கு வேதத்தின் மூலம் சில **வழிகளையும், எச்சரிப்புகளையும்** சொல்லிக்கொடுத்திருக்கிறார். **ஏவாளையும்** கர்த்தர் ஆரம்பத்திலேயே எச்சரித்தார். நீ அந்த பழத்தை சாப்பிடும் நாளில் சாகவே சாவாய் என்றார். **ஏவாளுக்கோ** கீழ்ப்படிய மனமில்லை.

ஆகவே பிசாசின் வார்த்தைக்கு அடிமையானாள். கர்த்தரும் அவளைஏதேன் தோட்டத்திலிருந்து தள்ளிவிட்டார். அப்படியே நமக்கும் **வேதம்** உண்டு. **தேவ ஆலோசனையும் எச்சரிப்பும்** அதில் இடம் பெற்றுள்ளன. ஒருவன் வேத வசனத்துக்கு கீழ்படிய மனமில்லை என்றால் நிச்சயம் **பிசாசின்** திட்டத்துக்கு அவன் அடிமையாகிறான் என்றுதான் அர்த்தம். நாம் நம் ஜெபத்தில் இடைவிடாமல் தேவனோடு தொடர்புகொண்டால் பிசாசின் எந்த திட்டமும் முயற்சியும் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கவே முடியாது.

**முதலாவது** பிசாசுக்கு நாம் **இடம் கொடுத்தால்தான்** அவன் நமக்குள் புகமுடியும். யோ.13:2ல் யூதாஸ் முதலாவது பிசாசுக்கு இடம் கொடுத்தான் என்று எழுதியிருக்கிறது. யோ. 13:27ல் அதன்பின்புதான் **பிசாசு யூதாஸ்க்குள் புகுந்தான்** என்று எழுதயிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் பேதுரு தன் நிரூபத்தில் **பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்** என்று எழுதினார். எபே. 4:27

ஜெபம் ஜெபம் ஜெபமே ஜெயம்

**ஜீவியத்துக்கு இதுவே சட்டம்.**

' இந்த தள்ளப்பட்ட பிசாசின் உருவத்தை வேறு ரூபத்தில் அன்று இரவு நான் கண்டேன். அந்த உருவத்தையும் இங்கு விவரிக்க விரும்பவில்லை. **மூனாறு** என்ற மலைவாசஸ்தலத்தில் இரண்டாம் நாள் இரவு கன்வென்ஷன் கூட்டம் முடிந்தது. உணவருத்தி நான் என் அறைக்கு சென்றேன். அன்று கேரளாவில் உள்ள UC காலேஜில் இருந்து புரோபஸர் காபிரியேல் என்ற ஒருவர் என் பிரசங்கம் கேட்பதற்கென்றே பல மைல்கள் கடந்து மூனாறு வந்திருந்தார். இரவும் பகலும் அவரோடு இணைந்து அந்த அறையில் சேர்ந்து ஜெபித்தோம்.

தூரத்தில் இருந்து வந்த மற்றவர்கள் தங்குவதற்கு வேறு சில ஏற்பாடுகளை சபை பொருப்பாளர்கள் செய்திருந்தார்கள். என் அறையில் ஒரு கட்டில் காலியாக இருந்ததால் அந்த புரோபஸரை என் அறையில் படுக்க சொன்னேன். அவரும் ஒரு நல்ல விசுவாசியாகும். அநேக தேவ காரியங்களைப்பற்றி அவர் என்னிடம் கேட்டார். அவரோடு அவைகளைக்குறித்து அதிக நேரம் பேசி நாங்கள் ஜெபித்து படுத்துறங்க இரவு 1 மணி ஆனது. சில மணி நேரங்கள் கழிந்தது. நல்ல தூக்கம்.

## திடீர் அலறல்:

திடீரென்று ஒரு அலரல் சத்தம். அதைத்தொடர்ந்து மீண்டும் அலரல் குரல். உடலை அசைச்சகாமல் கண்ணை மட்டும் திறந்து பார்த்தேன். ஒரே இருட்டு (இரவு விளக்கு வைக்கப்படவில்லை) யாரோ அழுதுக்கொண்டே இருந்தார்கள். என் கையில் டார்ச் இல்லை. என் தலைக்குமேல் சற்று தள்ளியிருந்த விளக்கு சுவிட்சை ஆன் செய்தேன். விளக்கு எரிந்தது. அழுபவர்கள் யாரும் அங்கு இல்லை. பக்கத்து கட்டிலில் படுத்திருந்த புரோபஸர் நன்றாக சலனமின்றி உறங்கிக்கொண்டிருந்தார். அவர்தான் ஏதோ சொப்பனத்தில் உளரியிருப்பார் என்று எண்ணி விளக்கை அணைத்தேன்.

உடனே சிறு ஜெபம் ஒன்றை முழங்கால் படியிட்டு செய்தேன். படுத்தேன். மீண்டும் உறங்கினேன். விடியற்காலை 4 மணிக்கு மறுபடியும் அதே அலறல் மீண்டும் சத்தம் ஆய்..........ஓய்.................. என்று பலவிதமான சத்தம் அதையடுத்து அழுகை.

சற்று நேரத்தில் அந்த பயங்கர காட்டினூடே அலறல் சத்தமும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது. இந்த அலறல் சத்தம் கேட்டு சில வினாடிகளேயானாலும். பல மணி நேரம் சம்பவித்தது போன்ற உணர்வே உண்டானது.

எங்கள் அறை கதவுகள் அடைக்கப்பட்டு உட்புறம் தாழ்பாள் போடப்பட்டிருந்தது. பிறகு யார் உள்ளே வந்திருக்க முடியும், கதவை திறந்துகொண்டு வெளியே வந்தோம். கடும் குளிர் அவுட்ஹவுஸில் வாட்ச்மேனை கூப்பிட்டோம். அவனிடம் இங்கு யாராவது வந்தார்களா? அழுதார்களா? என்று கேட்டோம். அவன் இல்லையே என்றான். மறுபடி அறைக்கு வந்தோம். இருவரும் முழங்கால் படியிட்டு சிறது நேரம் ஜெபித்து படுத்துக்கொண்டோம்.

**குறிப்பு:** அந்த இரவு நடந்த முழு சம்பவத்தையும் நேரில் கண்டவற்றையும் நான் கூற விரும்பவில்லை. காரணம், அவைகள் வேத வசன அடிப்படையல்ல- மேலும் பிசாசு வஞ்சிக்கிறவன், ஏமாற்றுகிறவன். அவன் தேவதூதனைப்போல் பிரகாசமாகவும் வருவான். அவன் ஏமாற்றுகிறவன். அவன் நோக்கம் கர்த்தருடைய பிள்ளைகளை தனக்கு பயப்படும்படி செய்வதாகும். அவனை பார்க்கிலும் **எனக்குள் உள்ளவர் பெரியவர்** என்பதை நான் அறிந்திருந்தபடியால் அவன் என்னை பயபடுத்த முயன்றது எதுவும் என்னிடம் எடுபடவில்லை. அவன் தோற்றுபோய் அந்த கட்டிடத்தைவிட்டே ஓடிப்போய்விட்டான்.

இப்படி அன்று இரவு நான் கேட்ட **சப்தங்களை** குறித்தும், பில்லி சூன்யத்தை குறித்தும் அந்த புரோபஸர் என்னிடம் கேட்டார். வேதத்தில் இவைகள் யாவும் உண்டு என்று எழுதியிருக்கிறது. ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் இவைகளை அலட்சிய படுத்தவேண்டும். இதைக்குறித்து மறுபடியும் யோசிக்ககூடாது. கதைபோல மற்றவர்களிடம் கூறவும் கூடாது.

எந்த பிரச்சனைகளுக்கும் காரணம், இது **பில்லி சூன்ய கட்டா?** இது **பிசாசின் சேட்டையா?** என்று நாம் கேட்டாலே **பிசாசு** மிகவும் **பெருமைக் கொள்ளுவான்.** ஆகவே இப்படிப்பட்ட சப்தங்களுக்கு நாம் பயப்படாமல் அதை **அலட்சியப்படுத்தும்போது** அவனைவிட, பிசாசைவிட **மிகப் பெரியவர்** நம் உள்ளே இருக்கிறார் என்ற உணர்வு நமக்குள் உண்டானால் நமக்கு எதைக்குறித்தும் பயம் உண்டாவதில்லை. அதோடு பிசாசும் நம்மைவிட்டு போய்விடுவான். அவன் கிரியைக்கு **நாம் பயந்தால்** அவன் நம்மை மேற்கொண்டுவிடுவான்.

91ம் சங்கீதத்தில் **அது வாய்க்காதே போகும்** என்று எழுதியிருக்கிறது. யாராவது நமக்கு எதிராக **தகடுகளோ, எலுமிச்சை பழம் மந்திரித்து** வைத்தாலோ நாம் அதை அலட்சியப்படுத்தி அதைப்பற்றி **யோசிக்காமல்** போய்கொண்டேயிருக்கவேண்டும். அதை **எடுத்து எறியமுயற்சிக்க**கூடாது. அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் இருந்தால் சத்துரு நமக்கெதிராக மந்திரித்த எந்த பொருளும் நம்மையோ நம் குடும்பத்தையோ ஒன்றும் சேதப்படுத்த முடியாது என்பது நம் வேதம் கூறும் சத்தியமாகும். இந்த அனுபவத்தை நாம் பெற்றால் பில்லிசூனியம் வைத்தவர் யாராக இருக்கும் என்று **யாரையும் சந்தேகிக்கமாட்டோம்.** பிசாசை நினைப்பதை விட்டுவிட்டு **கர்த்தரையும்** அவர் கிருபைகளையும் நினைப்போம்.

உங்கள் வீட்டில் **பில்லி சூன்யம்** இருக்கிறது. யாரோ உங்களுக்கு எதிராக மந்திரித்து வைத்துள்ளார்கள் என்று கூறும் **ஊழியர்களை வீட்டிலேயே** சேர்க்காதீர்கள். உங்களுக்குள் **உள்ளவர் பெரியவர்** என்பதை அடிக்கடி கூறிகொண்டிருங்கள்.

பிசாசு தோற்கடிக்கப்பட்டவன். இயேசுகிறிஸ்து **பிசாசை அழிக்கவரவில்லை, பிசாசை**

கட்டவும் வரவில்லை, பிசாசை **சபிக்கவும்** இல்லை. என்பதை உணர்ந்து நம் வாழ்கையில் பிசாசின் கிரியைகள் எதுவும் உண்டாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இயேசு பிசாசை ஜெயித்தார். பிசாசை கட்டவும், சபிக்கவும் செய்யும், அல்லது பிரசங்கிக்கும் எந்த ஊழியக்காரனையும் நம்பவேண்டாம்.

' கர்த்தருடைய ஊழியத்தில் பிசாசு பல விதத்தில் நமக்கு தடைகளை உண்டாக்குவான். நமக்கு **சரீர நோய்** உண்டாக்குவான். வீட்டில் நம் பிள்ளைகளை வியாதி படுக்கையில் ஆக்குவான். வீட்டில் நிம்மதியிழந்தால் நம் ஊழியம் பாதிக்கும் என்பது அவனின் எதிர்ப்பார்ப்பு.

ஆனால் நாம் அதை பொருட்டாக நினைக்காமல் ஊழியத்தில் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும். ஊழியக்காரர்களாகிய நமக்கு ஊழியத்திலும்,ஜெபத்திலும் **ஒத்துழைக்காத ஊழிய** தகுதியில்லாத **மனைவி நமக்கு அமைந்தால்** என்று வைத்துக்கொள்வோம் அவரை நாம் ஊழியத்தில் தகுதிபடுத்த, மனைவியை கட்டாயபடுத்தாமல், மனைவியயை மாற்றுகிற சக்தியுள்ள நம் ஆண்டவரின் காலை பிடித்து மனைவிக்காக அல்லது கணவருக்காக ஜெபிக்கவேண்டும்.

நம் ஆவிக்குரிய செயல்பாட்டை நம் உபதேசங்களை **புருஷனிடம்** அல்லது **மனைவியிடம்** திணிக்கக்கூடாது. அவரே புரிந்துகொள்ளும் வகையில் வீட்டில் **நம் சாட்சியின்** மூலம் **மனைவிக்கு** விளங்க வைக்கவேண்டும். **மனைவி நம்மை கனப்படுத்தும் அளவு** நம் சாட்சி வீட்டின் செயல்பாட்டில் காணப்படவேண்டும்.

என் **ஊழியத்துக்கு என் மனைவியை** தகுதிப் படுத்தும் ஆண்டவரே என்று கர்த்தரிடம் கெஞ்ச வேண்டும். **பலத்தினாலும் அல்ல, பராக்கிர மத்தினாலும் அல்ல, என் ஆவியாலே அது** ஆகும். சகரி. 4:6 என்று கர்த்தர் கூறுகிறர்.

**மனுஷன்** மற்றொரு **மனுஷனை** மாற்ற முடியாது. ஆனால் மாற்றுகிறவர் கர்த்தர். அதை புரிந்து செயல்பட வேண்டும் ஒருவேளை மனைவி ஆவிக்குறியவளானால் தன் ஜெப வாழ்க்கைப்போல என் கணவரின் வாழ்க்கையும் அமையவேண்டும் என்று கர்த்தரிடம் ஜெபிக்கலாம். ஆனால் **கணவனை கட்டாயப்படுத்தகூடாது. பிள்ளைகளையும்** அப்படியே கட்டாயபடுத்தக்கூடாது.

' **மூணார்** என்ற ஊரில் நடந்த என் கன்வென்ஷன் கூட்டம் வெற்றியடையக்கூடாது என்று பிசாசு என்னை புதிய முறையில் பயமுறுத்தி தடை செய்ய முயன்றான். ஆனால் உலகத்தில் இருப்பவனைவிட உங்களில் இருப்பவர் பெரியவர் என்ற வசனத்தின்படி **எனக்குள் இருப்பவர் பெரியவரானபடியால்** என்னை பயமுறுத்த அவனால் முடியாமல் அவன்தான் என்னைவிட்டு ஓடிப்போனான். இந்த அனுபவத்தைதான் இப்போது உங்களுக்காக எழுதினேன்.

**பில்லி சூன்யமானாலும் மந்திரமானாலும்** மந்திரித்த **எலுமிச்சை பழம்** ஆனாலும் இப்படிபல பொருட்களை எதிரியானவன் நமக்கு எதிராக உபயோகிப்பான். ஆனால் உண்மையான விசுவாசிகள் இவைகள் என்னவென்று ஆராயாமல் பயப்படாமல் அதையே **நினைத்து கவலைப்படாமல்** அவைகளை **அலட்சியபடுத்த** கற்றுக்கொள்ளவேண்டும்.

எந்த பிரச்சனையானலும் என்னில் உள்ள குறை என்ன? **எந்த வசனத்துக்கு** நான் கீழ்படியவில்லை!. **என் ஜெபகுறைவினால்** இந்த பிரச்சனை வந்திருக்குமா? என்று யோசித்தால் நீங்கள் ஆவிக்குரிய ஜீவியத்திலும் வளரலாம். கர்த்தரும் மகிமைப்படுவார்.

அது **உண்மையாக பில்லி சூன்யமாகவே** இருக்கட்டும். அல்லது **மந்திரித்த தகடாகவே** இருக்கட்டும்.

மறுபடியும் கூறுகிறேன், நீங்கள் அதை **எடுத்துபோட முயலவேண்டாம்.** அதை எடுத்துபோட **ஊழியக்காரர்களை** தேடியும் போக வேண்டாம்.

**பில்லிசூனியம்,கட்டுகள் எடுக்கும் மந்திரவாதிகளைப்** போன்ற **கிறிஸ்தவ ஊழியர்கள்** உண்டு. அவன் கூட்டத்தில் காணும் சாட்சிகளை **கண்டு நீங்கள் ஏமாற வேண்டாம்** அவன் கூட்டத்துக்கும் போகவேண்டாம்.

91ம் சங்கீதம் கூறுவதுபோல **அது வாய்க்காதே போகும்** அதாவது பில்லி சூன்யத்தின் செயல்பாடு **செயல் இழந்து போய்விடும்.**

அந்த கட்டுகள் அங்கு இருந்தால் அதற்கு **கிரியை செய்யும் சக்தியில்லாமல் போகும். நம் தேவன் பெரியவர்.**

**கர்த்தர் அறியாமல் தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒன்றும் நேரிடுவதில்லை.**

**(இயேசுகிறிஸ்து)உங்களில் இருக்கிறவர் அவனிலும்(பிசாசைகாட்டிலும்) பெரியவர்.**1யோ. 4:4).

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. | Title of the news paper | : **JAMAKKARAN** |
| 2. | Language(s) in which it is published | : **TAMIL / MALAYALAM** |
| 3. | Place of publication | : 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. | Periodicity of its publication | : Monthly |
| 5. | Printer's name | : M.Velu |
| | (whether citizen of India) | : Indian |
| | Address | : P.M.Press 168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. | Publisher & Editor's name | : **Dr.M.G.E.PUSHPARAJ** |
| | (whether citizen of India) | : Indian |
| | address | 89,Majeeth Street, Old Suramangalam. Salem - 636 005 |

I, **Dr.M.G.E.PUSHPARAJ** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 10.3.2016

**Dr.M.G.E.PUSHPARAJ**

Salem - 5

Signature of Publisher & Editor




# NO. 4

இந்தியாவில் கேரளா மாநிலத்தில் கோட்டயம் என்ற ஊரில் ஒரு நாள் நானும், மார்தோமா சபை குருவானவரும் ஒரு வீட்டிற்கு வியாதி படுக்கையிலிருக்கும் ஒருவருக்காக ஜெபிக்க சென்றோம். அந்த வீட்டின் தலைவரின் மனைவி மட்டும் மார்தோமா சபைக்கு போகாமல் அடிக்கடி **இலங்கை பெந்தேகோஸ்தே சபை(TPM)** ஆராதனையில் கலந்துகொள்ளுவார். ஆகவே அந்த TPM சபை போதகர் அன்று அந்த சகோதரியின் வீட்டு சந்திப்புக்காக ஜெபிக்க வந்திருந்தார்.

அந்த வீட்டு சகோதரி எங்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். நாங்கள் வந்தது அப்போதகருக்கு இஷ்டமில்லை என்பது அவர் முகத்தின் பிரதிபலிப்பை காணும்போதே புரிந்துகொண்டோம்.

கொஞ்ச நேரம் படுக்கையில் வியாதியாக இருப்பவரிடம் பேசிவிட்டு, ஆவிக்குரிய ஆலோசனைகளை கொடுத்துவிட்டு **ஜெபிப்போம்** என்று கூறி முழங்காலில் நின்றோம். ஆனால் அதுவரை அங்கு உட்கார்ந்திருந்த அந்த TPM போதகர் உடனே இருக்கையை விட்டு எழுந்து தான் புறப்படுவதாக கூறினார். வீட்டிலுள்ளோர், பாஸ்டரை நோக்கி ஜெபம்முடித்துபின் போகலாமே என்றார்கள். நாங்களும் பாஸ்டரைப்பார்த்து ஜெபம் முடித்துபோகலாம் என்று கேட்டுக்கொண்டோம். அவரோ தனக்கு அவசர ஜோலி இருப்பதாக கூறி உடனே கிளம்பிவிட்டார்.

ஜெபிக்க வந்த எங்களுக்கு அவரின் செயல் என்னவோ போலிருந்தது. என்றாலும் நாங்கள் ஜெபித்து முடிந்தோம்.

அந்த போதகரை வாசற்படி வரை வழி அனுப்பிவிட்டு வந்த அந்த வீட்டின் தலைவியிடம் அந்த போதகரின் அலட்சிய போக்குக்கு காரணம் கேட்டோம்.

அந்த சகோதரி கூறிய பதில் எங்களுக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. சரியான **பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் இல்லாத** C.S.I. சபையை சேர்ந்த டாக்டர் புஷ்பராஜ் மார்தோமா ஆயர் போன்றவர்களின் ஜெபத்தில் தான் இணைய முடியாது என்று அந்த போதகர் காரணம் கூறினாராம். அப்போது அந்த சகோதரி தன் சபை பாஸ்டரிடம் கூறினராம் டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் C.S.I. சபையை சேர்ந்தவரானாலும் **அபிஷேகிக்கப்பட்டவர்** என்று அந்த சகோதரி பதில் கூறினாராம். அதற்கு அந்த பாஸ்டர்: டாக்டர்.புஷ்பராஜ் அவர்களை கேரளா முழுவதும் பெருமையாக பேசுவதை நான் அறிந்திருக்கிறேன். ஆனால் அவர் அபிஷேகிக்கப் பட்டவரானாலும் அவருடைய ஐக்கியம் C.S.I.சபையோடு இருப்பதே நான் எழுந்து வந்ததற்கு காரணம் என்று கூறி சென்றுவிட்டாராம்.

இந்த நிகழ்ச்சி என் உள்ளத்தை பெரிதும் பாதித்தது. மற்ற பெந்தேகோஸ்தே சபை நண்பர்களிடமும், போதகர்களிடமும் இதைக்குறித்து கேட்டேன். அவர்கள் கொடுத்த பதில் : நாங்களும் பெந்தேகோஸ்தே சபையை சோந்தவர்களாக இருந்தாலும் எங்கள் ஜெபத்தையும் அக்குறிப்பிட்ட TPM சபை பாஸ்டர் நம்புவதில்லை. எங்கள் ஜெபத்தில் ஐக்கியம் கொள்ளுவதுமில்லை என்றார்கள். நாங்கள் ஜெபித்தால் அதற்கு அவர் ஆமென் என்று கூட கூறுவதில்லை என்றார்கள்.

என் அனுபவத்தில் (TPM.) **இலங்கை பெந்தேகோஸ்தே** சபை போதகர்கள் மட்டுமல்ல. (LEF)லேமேன் இவாஞ்சிலிக்கல் சபை போதகர்களும்,விசுவாசிகளில் பலர் மேற்கூறிய போதகரைப்போலவே நடந்துகொள்கிறார்கள்.

**அவிசுவாசியோடு விசுவாசி இணைந்துபோவதுகூடாதுதான்.** ஆனால் இரட்சிக்கப்பட்ட விசுவாசியோடு ஜெபத்தில் ஐக்கியம் கொள்வதில் தவறென்ன?

ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். அந்த ஜெபநேரத்தில் அங்கு வந்த அந்த போதகர் எங்களோடு ஐக்கியப்படவேண்டாம். ஆனால் **சூழ்நிலையின் நாகரீகத்துக்காக** அவர் ஜெபிக்காமல் போனாலும் மௌனமாக அமர்ந்திருக்கலாமே? அன்று அவந்த ஜெப நேரங்களில் அவர் காட்டிய அலட்சியத்தை கர்த்தர் ஒரு நாளும் அங்கீகரித்து இருக்கமாட்டார்.

என் வீட்டிற்கு பல ஊழியக்காரர்கள் வருவார்கள். அதில் சில ஊழியர்கள் பற்றியும் அவர்களின் போலி வாழ்க்கையைப்பற்றியும் நானே நேரில் கண்டு அறிந்திருக்கிறேன்.

ஜெபத்தில் அவர்கள் பேசும் **அன்னிய பாஷை** போலியானது என்பதை திட்டவட்டமாக ஆவியானவர் எனக்கு காட்டுவார். ஆவியை பகுத்தறிதலின் கிருபை மூலம் அதை எனக்கு காட்டுவார் என்றாலும் ஜெபம் முடியும்வரை நான் பொருமையோடு இருப்பேன். ஜெபத்தின் முடிவில் நான் மட்டும் **ஆமென்** கூறமாட்டேன். காரணம்! அவர் செய்யும் ஜெபம் போலியானது. அவர் சாட்சிகெட்டவர் என்பதை அறிவேன். அவர் மறைமுக பாவத்தில் ஈடுபட்டவர். ஆகவே கர்த்தர் அந்த ஜெபத்தை கேட்கவே மாட்டார். ஆகவே அவர் செய்த அந்த ஜெபத்தில் எனக்கு ஐக்கியம் கொள்ள என் மனம் இஷ்டப்பவில்லை. ஆனால் அதே சமயம் இயேசுவின் நாமத்தில் வந்த ஒரு ஊழியர் என்பதால் அவருக்கு மரியாதை காட்டினேன். ஜெபம் முடிந்தபின் ஆவியானவர் எனக்கு காட்டின சில காரியத்தையும் எச்சரிப்பையும் ஆலோசனையையும் அவர்களுக்கு கூறி காணிக்கையையும் கொடுத்தனுப்புவேன்.

அன்பானவர்களே, **இருளுக்கும் ஒளிக்கும்** ஐக்கியமில்லை. சரிதான்!. ஆனால் அவர் மனுஷரீகமாக காட்டவேண்டிய அன்பை **மரியாதையை,** நாகரீகத்தை அங்கு கூடியிருந்தவர்கள் சபையினராக இருந்தாலும் அவர் நாகரிகத்தையும் ஜெபத்துக்கான மரியாதையையும் காட்டியிருக்கலாம். ஒரு சபையிலுள்ளவர்கள் வேறு உபதேசத்தில் உள்ள சபையை சேர்ந்தவர்களை கண்டால் பகையாளியை காண்பதுபோல் அவர்களிடம் பேச விரும்பாமல் ஓடுகிறார்கள். சுமார் 2000 வருடங்களாக மேசியா வருவார் என்று காத்திருந்த யூதர்கள் இயேசுவாக அவதரித்த **மேசியாவை** நம்ப அல்லது ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்தும் இயேசுகிறிஸ்து எத்தனையோமுறை அவர்களின் ஆலயத்திற்கு சென்று அவர்களுக்கு இயேசு விளக்கம் கூறினார். மாத்திரமல்ல. தவறாமல் வாராவாரம் சனிக்கிழமைதோறும் அவர்களின் ஆராதனையிலும் கலந்து கொண்டாரே!

வெளிப்படையாக இயேசுவின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ள பயந்து **இரவு நேரம்** பார்த்து இரகசியமாய் சந்தித்த **நூற்றுக்கதிபதியோடும்** இயேசு பேசினாரே, அவரையும் நேசித்தாரே. மற்றொரு இடத்தில் வேற்று இனத்தவரை இயேசு சுகமாக்கினாரே? ஆனால் இன்றோ இயேசுவின் பெயரை வைத்துக்கொண்டு **உபதேசம் காரணமாக** ஒரு சபை மற்றொரு சபையினரை என்னமாய் பகைக்கிறார்கள்.

கிறிஸ்துவைப்பற்றிய வைராக்கியத்தைவிட **சபை உபதேச வைராக்கியம்** கிறிஸ்துவையே மறைக்கிறது.

TPM & LEF போன்ற சபைகளில் சிலர் ஆவிக்குரிய தீவிரவாதிகளாக **குடும்பத்தையே பிரித்துவிடுகின்றனர்.** சில வீடுகளில் **புருஷன்-மனைவியை** பிரித்துவிடுகிறார்கள். இது மிக அநியாயம். கர்த்தர் இவர்களை மன்னிக்கவே மாட்டார். கூடபிறந்தவர்களோடும் இப்படிப்பட்ட சபையினர் உறவு வைக்கமாட்டார்கள். மற்ற சபையினரின் **உபதேசம் தவறு** என்றாலும் அவர்கள் சபையில் ஆராதனைக்கு போகவேண்டாம். ஆனால் அண்ணன், தம்பி, மகள் உறவுகள் விடும் அளவு அத்தனை பயங்கரவாதிகளாக இவர்களிடம் கிறிஸ்துவின் அன்பு அறவே இல்லை. இவர்களின் மரணம் நிச்சயம் சரியானதாக இருக்காது.

மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சியைவிட மோசமான மற்றொரு விஷயம CSI சபை விசுவாசிக்குள் குறிப்பாக அங்கு கூடும் **ஜெபக்குழுக்களுக்குளதான்** எத்தனை பகைமையை காட்டுகிறார்கள்.

இப்போது ஒவ்வொரு CSI,லூத்தரன் சபையிலும் ஜெபகுழுக்கள் தோன்ற ஆரம்பித்துள்ளது. நல்ல சங்கதிதான் FMPB (BYM) I.E.M. **இயேசு அழைக்கிறார்** போன்ற பெயரில் பல **ஜெப குழுக்கள்** பல இடங்களில் கூடுகிறது. மேலே காணும் பெயரில் உள்ள ஊழியத்தை குறித்து யார் பாராட்டுப்படுகிறார்களோ அவர்கள் குழுவாக சேர்ந்து ஆலயங்களில், வீடுகளில் இணைந்து ஜெபிக்கிறார்கள். இது மிக அவசியமே. ஆனால் ஒரு குழுவை மற்றொரு குழு **பகைப்பதும் பழிப்பதும்** அதை நாம் நேரில் காண நேரிடும்போது. கேட்க நேரிடும்போது எத்தனை வேதனையாக இருக்கிறது. கேவலமாக இருக்கிறது. இவர்களின் ஜெபகூடுகையில் இயேசு வருவாரா?

ஒரு ஜெபக்குழு ஏதாவது ஆவிக்குரிய கூட்டம் வைத்தால் மற்றொரு குழு அங்கத்தினர் அக்கூட்டங்களில் பங்கேற்பதில்லை. அவர்கள் நடத்தும் ஜெய ஐக்கியங்களிலும் பங்கேற்பதில்லை. ஜெபக்குழுக்களில்தான் எத்தனை வேற்றுமை!

**ஒருவரை ஒருவர் கடித்து பட்சித்தீர்களேயானால்** அழிவீர்கள். கலா .5:15 மாற்று சபையினரை அல்லது ஜெபக்குழுவினரை காணும்போது நமக்குள் உள்ள **கிறிஸ்துவின் அன்பை** காட்ட முந்திக்கொள்ள வேண்டும்.

உபதேசங்களில் வித்தியாசம் உண்டு. ஆனால் **கிறிஸ்து ஒருவரே.** அதில் ஒரு மாற்றமும் இல்லை. ஆனால் **கிறிஸ்துவின் அன்பு உபதேசத்துக்கும் அப்பாற்பட்டது ஆகும்.**

உதாரணமாக **பெயர் சொல்லி அழைக்கும்** ஊழியங்களைப்பற்றி எழுதினேன். அந்த **விளம்பர** கவர்ச்சி. **ஜெபத்தில் பெயரை அழைப்பது**,வசனத்தோடு இணைந்து இல்லாதிருந்ததால் அதை நான் எச்சரித்து தெளிவுபடுத்தினேன். எச்சரிப்பு கொடுத்தேன். அந்த உபதேசத்தில் அல்லது அவர்களின் **பொய்யான ஊழியமுறையில்** கிறிஸ்துவை அறிவிப்பதில்

எனக்கு ஒப்புதல் இல்லை. **ஒரு குழந்தைக்கு ரூபாய் 2000 வீதம் வாங்கி** ஜெபிப்பது, பணம் வசூலிக்கும் செயலை **கர்த்தர் தனக்கு சொன்னார்** என்று அவர்கள் பொய்யாய் கூறினால் அதை எப்படி ஏற்றுக்கொள்வது? அது தவறுதானே!. கர்த்தர் ஒருகாலும் அப்படி வசூல் செய்ய கூறியிருக்க முடியாது என்று எழுதினேன். என் ஜாமக்கார வாசகர்களுக்கு மட்டும் அதை அறிவித்து அவர்கள் வஞ்ஜிக்கப்படாதபடி இருக்க எச்சரித்து எழுதினேன். ஆனால் அதே சமயம் **அந்த விதமான ஊழியம் செய்யும் ஊழியக்காரர்களை ஒருபோதும் நான் பகைத்ததில்லை.** மேலும் அவர்களுக்காக எப்போதும் ஜெபிக்கிறோம். சந்தர்ப்பம் உண்டாகும் போது அந்த ஊழியங்களில் பங்கெடுக்கிறோம். அந்த ஊழியத்தில் தொடப்பட்ட ஆத்துமாக்களுக்கு ஜெபிக்கவும் பாரப்படவும் செய்கிறோம். அப்படிப்பட்டவர்கள் கூட்டத்தில் பலர் இரட்சிக்கப்படுகிறதை நாங்கள் நம்புகிறோம். கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறோம்.

**உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்க பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருகக வேண்டியதே** 1 கொரி 11:19

இயேசு உலகத்திலிருந்தபோது சீஷர்களில் ஒருவனாகிய **யோவான்** இயேசுவிடம் வந்து நம்மை **பின்பற்றாதவன் ஒருவன் உமது நாமத்தினாலே** பிசாசுகளை துரத்துகிறதை கண்டோம். அவன் நம்மை பின்பற்றாதவனானதால் அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு **இயேசு அவனை தடுக்க வேண்டாம்** என்றார். மாற்கு 6:38,39

ஆகவே அன்பானவர்களே உங்கள் உபதேசத்துக்கு மாறானவர்களை மற்ற சபையினரை தயவுசெய்து பகைக்காதீர்கள். வெறுக்காதீர்கள். ஒருவேளை உங்கள் உபதேசம் வேத வசனத்தின்படி சரியானதாக இருந்தால் அந்த மாற்று உபதேச சபை விசுவாசிகளிடம் அன்பு காட்டினால் அவர்கள் சரியான உபதேசத்தில் அவர்களை வழிநடத்த உங்களுக்குவாய்ப்பு கிடைக்குமே!

இயேசு **நம்மை ஒருமைப்பாட்டில் தேறியவர்களாயிருக்கும்படிக்கு ...... வேண்டிகொள்கிறேன்** என்றார். யோ. 17:23

**கிறிஸ்து....நம்மில் அன்புக்கூர்ந்ததுபோல நீங்களும் அன்பிலே நடந்துக் கொள்ளுங்கள்.** எபே. 5:2

**நாம் ஒருவரிடத்தில்** ஒருவர் அன்பு கூர்ந்தால்..... தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். 1 யோ. 4:12

**ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கு...... .வேண்டிக்கொள்கிறேன்** என்று இயேசு ஜெபித்தார். யோ. 17:23

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## காணிக்கை

**சில வாசகர்கள் ஜாமக்காரன் பத்திரிக்கைக்காக காணிக்கை அனுப்பினேன் நீங்கள் பத்திரிக்கை அனுப்பவில்லை** என்று எழுதுகிறார்கள். மணியாடரில் நீங்கள் காணிக்கை அனுப்பும்போது எதற்காக அந்த பணம் அனுப்பினீர்கள் என்பது நீங்கள் எழுதமுடியாது. எனக்கு காரணமும் தெரியாது. ஆகவே பணம் அனுப்பிய உடன் ஒரு கடிதத்தில் உங்கள் முழு விலாசத்தையும் தொலைபேசி எண்ணையும் எழுதி எனக்கு பத்திரிக்கை அனுப்பவும் என்று அறிவிக்கவும். புதிய வாசகர்களாக இருந்தால் நான் புதிய வாசகர் என்று எழுதவும். நன்றி.

# அந்நியபாஷை குழப்பம்

அநேக வருடங்களுக்கு முன் **அந்நியபாஷையின்** போலிதனத்தையும் அதை பயிற்சிவிக்கிறவர்களின் மாய மாலத்தையும் துண்டுதுண்டாக அவ்வப்போது ஜாமக்காரனில் எழுதி வந்தேன். அதற்கே ஏராளமான வரவேற்பு உண்டானது. அதை புத்தகமாக்கி வெளி கொண்டுவரவேண்டும் என்று எனது வாசகர்கள் பல வருடங்களுக்கு முன்பே எனக்கு கடிதங்கள் எழுதி சோர்ந்துபோனார்கள்.

என்னுடைய வயதுகூடகூட என் மரணமும் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்று தானே அர்த்தம். ஆகவே என் மரணத்துக்குமுன் இந்த வேத இரகசியத்தை தெளிவுப்படுத்தி ஒரு சில மக்களையாவது இந்த மாய்மால **பரவச உபதேசத்திலிருந்து** காப்பாற்ற முயன்றேன்.

**அந்நியபாஷை குழப்பம்** என்ற புத்தகத்தை என் வாசகர்களுக்கு ஜாமக்காரன் மாத பத்திரிக்கை மூலமாக இலவசமாக அனுப்பவிட்டு, அதன்பின் தனி புத்தக வடிவில் மற்றவர்களுக்கு விலைக்கு விற்க திட்டமிட்டுள்ளேன். வெளிநாட்டவர்களும் அந்நியபாஷை குழப்பத்தைப்பற்றிய புத்தகத்தை **ஆங்கில பாஷையில்** வெளியிடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

குறிப்பாக, **ஜெர்மனியில்** உள்ள **டொச்சு பாஷை சபை** பாஸ்டர்கள் வெகு ஆவலாக ஆங்கில பிரதியை பெற்று அதை அவர்கள் செலவில் **டொச்சு பாஷையில்** மொழிபெயர்த்து ஜெர்மனி முழுவதும் வெளியிடும் உரிமையை பல வருடங்களுக்கு முன்பே எழுத்துமூலம் எழுதி வாங்கிக்கொண்டார்கள்.

ஆகவே **அந்நியபாஷை குழப்பம்** குறித்து புத்தகமாக வெளியிடும் தருணம் 2016ல்தான் எனக்கு வாய்த்தது என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். கர்த்தருக்கே மகிமை உண்டவாதாக.

## அந்நியபாஷை குழப்பம்

**அந்நியபாஷையை** குறித்து எழுதும்முன் இந்த போலி **அந்நியபாஷையை** அறிமுகப்படுத்தியதே **பெந்தேகோஸ்தேசபைகள் மட்டும்தான்**. ஆகவே முதலில் **பெந்தேகோஸ்தே சபையைப்பற்றி** நீங்கள் அறிந்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்.

## பெந்தேகோஸ்தே என்றால் என்ன?:

யூதர்களின் ஓய்வுநாள் என்பது சனிக்கிழமையாகும். பஸ்கா பண்டிகையிலிருந்து ஏழாவது நாள் வரும் **சனிக்கிழமை** ஓய்வுநாளுக்கு மறுநாள் ஞாயிற்றுகிழமை பஸ்கா பண்டிகையின் 50வது நாளாகும். இந்த நாள் வாரத்தின் முதல் நாளாகும். இந்த நாளில்தான் பரிசுத்த ஆவியானவரின் முதல் இறக்கம் எருசலேமில் மேல்அறையில் காத்திருந்த சீஷர்கள் மேல் உண்டானது. இயேசுகிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டுகால திருச்சபை தோன்றிய நாளாகும்.

‘ இதை பழைய ஏற்பாட்டில் **வாரங்களின் பண்டிகை** என்பார்கள். யாத் 34:22, லேவி 23:17, உப 16:10.

‘ **அறுப்புக்கால பண்டிகை** என்றும் கூறுவார்கள். யாத் 23:16.

‘ **முதல் கனி** கர்த்தருக்கென்று செலுத்தும்நாள் என்றும் கூறுவார்கள். எண் 28:26.

## பெந்தேகோஸ்தே சபை:

உலகத்திலேயே முதல் **புதிய ஏற்பாட்டு திருச்சபை** உருவான நாள் யூதர்களின் பண்டிகையின் முக்கிய நாளாகிய **பெந்தேகோஸ்தே** என்ற பெயர் கொண்டநாளில்தான் உருவானது. அப்படி உருவான அந்தக்கால முதல் சபைக்குகூட சீஷர்கள் யாரும் **பெந்தேகோஸ்தே சபை** என்ற பெயர் வைக்கவில்லை.

அந்த காலத்தில் சீஷர்கள் சுவிசேஷம் அறிவித்ததால் புதிய ஏற்பாட்டு சபை உருவானது. பல்வேறு இடங்களில் சீஷர்கள் செய்த ஊழியம்மூலம் **யூதர்களும், புறஜாதியினரும்** இயேசுகிறிஸ்துவை பிதா அனுப்பிய **மேசியாவாக** ஏற்றுக்கொண்டு அவர்களை கொண்டு ஆங்காங்கு சபைகளை உருவாக்கினார்கள். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் சுவிசேஷம் அறிவித்ததால் முதல் **புதிய ஏற்பாட்டு** சபை உருவானது. மேலும் சீஷர்கள் எருசலேம் சுற்றியுள்ள ஊர்களில் திரிந்து சுவிசேஷம் அறிவித்ததால் **யூதர்கள்** மட்டுமல்லாமல் புறஜாதியினரும் இயேசுவே **மேசியா** என்று அறிக்கையிட்டு **இயேசுவை தெய்வமாக** ஏற்றுக்கொண்டனர். அதன்மூலம் பல சபைகளை சீஷர்கள் உருவாக்கினார்கள். **அந்தியேகியா** என்ற துறைமுக பட்டிணத்தில்தான் சீஷர்கள் உலகத்திலேயே **கிறிஸ்தவர்கள்** என்று முதன்முதல் அழைக்கப்பட்டார்கள். அப் 11:26.

சீஷர்கள் பலர் மேலும் சுவிசேஷம் அறிவித்து இயேசுவை தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்களை ஒன்று கூட்டி அவர்களை வைத்து பல சபைகளை உருவாக்கினார்கள். அப்படி ஆரம்பிக்கப்பட்ட சபைகள் எதற்கும் அதை ஆரம்பித்த எந்த அப்போஸ்தலர்களின் பெயரையும் அவர்கள் சூட்டவில்லை.

இப்போது நாம் நம் சபைகளுக்கு St.Stephens Church,St.Peters Church, St.Andrew Chruch,St.Michel Church,St.Paul's Church என்றும், கத்தோலிக்கரிலிருந்து புரட்சி செய்து பிரிந்து புரோட்டாஸ்ட்ன்ட் சபை உருவாக்கிய மார்டின் லூத்தர் அவர்களின் தன் பெயரில்

**லுத்தரன் சபை** உருவானது. இப்படிப்பட்ட பல பெயர்களை சபைக்கு வைத்து நான் இந்த பெயரில் உள்ள சபையை சேர்ந்தவன் என்று கூறி பெருமைக்கொள்கிறோம்.

அதைப்போலவே நமக்கு சுவிசேஷம் அறிவித்த மிஷனரிமார்களின் பெயர்களிலும் பலர் சபைகளுக்கு பெயர் வைக்கிறார்கள். இப்படி பல மிஷனரிகளின் ஞாபகர்த்தமாக சபைகளுக்கு பெயர் சூட்டுகிறோம். மேலும் பல இடங்களில் எந்த நாட்டிலிருந்து மிஷனரிகள் புறப்பட்டு வந்து நமக்கு சுவிசேஷம் அறிவித்தார்களோ அந்த **நாட்டின் பெயரையே** சபைக்கும் வைத்தார்கள். **லண்டனிலிருந்து** வந்த மிஷனரிகளால் ஆரம்பிக்கபட்ட சபை **லண்டன்மிஷன்** சபை என்றும்,**டென்மார்க்கிலிருந்து** வந்து மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட சபை **டேனிஷ்மிஷன் சபை** என்றும் **அமெரிக்கன் மிஷன்** சபை,பில்தெல்பியா சபை, **கொரியன்** சபை என்றெல்லாம் பெயர் வைத்தார்கள். வேறு சிலர் **கர்த்தரின்** பெயரில் சபை தொடங்கினார்கள். **இம்மானுவேல் சர்ச், கிறைஸ்ட் சர்ச், சர்ச் ஆப் காட்** இப்படி இன்னும் பல பெயர்களில் உலகெங்கும் சபைகள் இயங்குகின்றன.

**பவுல்** கூறுவதை கவனியுங்கள்: 1 கொரி 3:4-7. **ஒருவன் நான் பவுலைச்** சேர்ந்தவன் என்றும், வேறொருவன் நான் **அப்பொல்லோவை** சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாமிசத்துக்குறியவர்களல்லவா?..... **பவுல் யார்? அப்பொல்லோ யார்**?(இவர்கள் யாவரும்) நீங்கள் (இயேசுவை) **விசுவாசிக்கிறதற்கு காரணமாயிருந்த ஊழியக்காரர்கள்தானே?. பவுலாகிய** நான் நட்டேன். அப்பொல்லோ நீர் பாய்ச்சினான் - **தேவனோ விளைய** செய்கிறவர்... அப்படியிருக்க **நடுகிற**(பவுலினாலும்)வனாலும் ஒன்றுமில்லை. **நீர் பாய்ச்சுகிறவனாலும்(அப்பொல்லோவினாலும்) ஒன்றுமில்லை. விளைய செய்கிற தேவனாலே எல்லாமாகும்.** இதன் **அர்த்தம் சுவிசேஷம் அறிவித்தவர்களான பவுல்,அப்பொல்லோ ஆகிய** இவர்களால்தான் நாங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டோம் என்று **இவர்கள் பெயர்களை** கூறி பெருமைப்பட்டுக்கொள்வதில் ஒரு பிரயோனமும் இல்லை என்று பவுல் கூறுகிறார். அந்த காலத்திலும் சீஷர்களின் பெயரில் சபை பிரிவு உண்டாக இருந்தது. அந்த நோக்கத்தை பவுல் அறிந்து அதை தன் நிருபம் மூலம் சபைகளுக்கு எழுதி அறிவித்து அவர்கள் தவறான எண்ணத்தை உடைத்தெரிந்தார். ஆகவேதான் ஆரம்ப திருச்சபைகள் **சீஷர்களின்** பெயரில் சபை அழைக்கப்படாமல் சபைகள் ஸ்தாபிக்கப்பட்ட **இடத்தின் பெயரில்** சபை அறியப்பட்டது. உதாரணமாக **எபேசு** பட்டணத்து சபைக்கு **எபேசுசபை** என்றும் தெசலோனிபட்டணத்தின் பெயரிலும் **மக்கொதொனியா** பட்டணத்து பெயரிலும் சபைகள் ஆரம்பிக்கப்பட்டு **தெசலோனி சபை, மக்தொனியா சபை,பெரோயா சபை,எபேசு சபை** என்று இடத்தின் பெயரில் சபை அறிவிக்கிப்பட்டது.

புதிய ஏற்பாட்டு சபைகளுக்கு அன்றைய நாட்களில் சபையின் பெயர் எப்படியிருக்க வேண்டும்? எப்படி சபை அழைக்கப்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

ஆனால் தற்காலத்தில் அவரவர்கள் தங்கள் இஷ்டப்படி சபைகளுக்கு பெயர் வைத்துக் கொண்டார்கள். **பிரதரன்சபை,கிறிஸ்துவின்சபை,பேப்டிஸ்ட்சபை,ஸ்டிரிக்ட் பேப்டிஸ்ட்**

**சபை,என்றும் இதில் முதலாவது(1st) பேப்டிஸ்ட்சபை** நாங்கள்தான் என்று அறிவிக்கும் வகையில் (முதல்) **பர்ஸ்ட் பேப்டிஸ்ட் சர்ச்** என்ற பெயரில் சபைகள் பெருகின. இதோடு நின்றுவிடாமல் பலவித தமாஷான பெயர்களிலும் சபைகளின் பெயர் பட்டியல் நீண்டுக்கொண்டே போகிறது.

## போலியான பெந்தேகோஸ்தே சபைகள்:

' இப்படிப்பட்ட சூழ்நிலையில் 1901ம் ஆண்டு அமெரிக்காவில் நடந்த முழு இரவு ஜெபக்குழுவில் **ஒரு பெண்** ஜெபத்தில் உளறினாள். அதை அப்போஸ்தலர்கள் காலத்து **அந்நிய பாஷை** என்று நம்பி ஏமார்ந்தது ஒரு கூட்டம். இரட்சிக்கப்பட்டு மனந்திரும்பின பல சபைகள் அந்த காலத்தில் ஏராளமாக இருந்தது. அந்த சூழ்நிலையில் தங்கள் சபையை மற்ற சபைகளிலிருந்து வித்தியாசப்படுத்தவும் நாங்கள்தான் சிறந்தவர்கள் என்று தங்கள் சபையை வேறுப்படுத்தி காண்பிக்கவும் ஒரு முக்கிய அடையாளமாக போலியான **அந்நியபாஷையை** இந்த சபைகள் அறிமுகப்படுத்தியது. புதிய ஏற்பாட்டு திருச்சபை உருவான **பெந்தேகோஸ்தே** தினத்தன்று முதல் பரிசுத்தாவி இறக்கத்தின்போது மேலறையில் நின்ற சீஷர்கள் 120பேர்களின் வாய் வழியாக ஆவியானவர் பேசின பற்பல பாஷைகள் அந்த சரித்திர சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி. அந்த பெந்தேகோஸ்தே நாளில் தான் நடந்தது. தங்களின் சபை அந்த ஆரம்பகால சபையலிருந்து தோன்றியது என்று பொய்யாய் இவர்களே கற்பனை செய்து தங்கள் சபைக்கு **பெந்தேகோஸ்தே சபை** என்று பெயர் வைத்து மற்ற பெயர்களிலுள்ள மற்ற சபைகளிலிருந்து தங்களை வேறுபடுத்தி உலகுக்கு காண்பித்தார்கள்.

இதிலிருந்து பிரிந்து பல பெயர்களில் குட்டிகுட்டி பெந்தேகோஸ்தே சபைகள் தோன்றி பல புது பெயர்களை தங்ளோடு சேர்த்துகொண்டு **சிலோன் பெந்தேகோஸ்தே சபை(TPM)**, இந்தியன் பெந்தேகோஸ்தே சபை, **பூரண சுவிசேஷ** பெந்தேகோஸ்தே சபை என்றும், **அசம்பளிஸ் ஆப் காட் பெந்தேகோஸ்தே** சபை என்றும் விதவிதமான பெயர்களில் தங்களை அழைத்துக் கொண்டார்கள். இவர்கள் எந்த பெயரில் தங்களை பெந்தேகோஸ்தே சபை என்று அழைத்துக்கொண்டாலும் ஒரே ஒரு விஷயத்தில்,ஒரே உபதேசம் கொண்டவர்களாக இருப்பார்கள். அதுதான் **பொய்யாய் பேசப்படுகிற அந்நிய பாஷை** என்ற பொய் உபதேசம் ஆகும்.

## பொய்யில் பிறந்த பெந்தேகோஸ்தே சபை:

உலகில் எந்த சபையும் **பொய்யை அஸ்திபார** உபதேசமாக்கி உருவாகவில்லை. ஆனால் பெந்தேகோஸ்தே சபைகள் அனைத்திலும் சபையின் அஸ்திபாரமே பொய்யான **அந்நிய பாஷைதான்.** பெந்தேகோஸ்தே சபை ஆரம்பமே பொய்யில் தான் தோன்றியது. சபையின் பாஸ்டர் முதல் சபை ஜனங்கள் வரை அனைவரும் **அந்நிய பாஷையில்தான்** பகிரங்கமாக துணிந்து பொய் பேசுகிறார்கள்.

சிலர் பரம்பரையாக பெந்தேகோஸ்தே சபையில் வளர்ந்ததால் தாங்கள் பேசுவது பொய் என்று அறியாமல் அந்நியபாஷை பேசுகிறார்கள். ஏன் அப்படி உளருகிறோம், எப்படி நம்மால்

இப்படி உளரமுடிகிறது? இதனால் தனக்கு **என்ன பிரயோஜனம்** ஆண்டவர் இதில் மகிமைப்படுவாரா? ஏன் **அந்நியபாஷை பேசினோம்** என்றே தெரியாமல் இவைகளின் அர்த்தம் என்ன? வேதத்தில் இதைப்பற்றி என்ன சொல்கிறது என்பதை இவர்கள் ஆராய துணிவதில்லை. இவர்கள் வளர்ந்து பெரிய உயர்ந்த படிப்பு படித்தாலும் படிப்பின் ஞானத்தினால் நாம் பேசும் அந்நியபாஷை தேவைதானா? அர்த்தம் இல்லாமல் ஏன் இப்படி பேசுகிறோம் என்று யோசிக்க முயலுவதில்லை. சிலர் அதைப்பற்றி யோசிக்கவும்,கேள்வி கேட்கவும் பயப்படுகிறார்கள்.சபை நடத்தும் பாஸ்டருக்கு தெரியும். தான் பேசும் அந்நியபாஷை பொய் என்று, அதே பொய் உபதேசத்திலேயே சபை மக்களையும் பைத்தியக்காரர்களாக்கி அவர்கள் உளருவதை பார்த்து ரசிக்கிறார்கள். இதனால் தங்களுக்கு நேரபோகும் ஆபத்தை பாஸ்டர்கள் உணருவதில்லை. அந்நியபாஷை என்ற கவர்ச்சியினால் மக்கள் கவரப்படுகிறார்கள். மக்கள் சபைக்கு அதிகம் கூடுகிறார்கள்.

ஆகவே அவர்களை மேலும் **மேலும் பைத்தியக்காரர்களாக** மேலும் மேலும் முயற்சிக்கிறார்களே தவிர, வேதத்தை வாசித்து இதைக்குறித்து தியானித்து தெளிவுபெற முயலுவதில்லை. முயன்றால் உண்மை விளங்கும். உண்மையை புரிந்துக்கொண்டால் **அந்நியபாஷை** பேசுவதை நிறுத்தவேண்டிவரும். அப்படி அந்நியபாஷையை பாஸ்டர் நிறுத்திவிட்டால் பாஸ்டர் வேலை போய்விடும். இயேசுகிறிஸ்து கட்டளையிடாதது, சீஷர்கள் யாரும் உபதேசிக்காதது, வேதம் கூறாதது ஆகிய விவரங்கள் அறிந்தும் ஜனங்களை பரவசப்படுத்த ஜனங்களை ஏமாற்ற இவர்கள் பயன்படுத்தும் அந்நியபாஷை என்ற உபதேசம் நூற்றுக்கு நூறு பொய்யானது. ஆகவேதான் பொய்யில் உருவான **சபை பெந்தேகோஸ்தே சபை** என்கிறேன்.

## யாரும் அந்நியபாஷை பேசவில்லை:

இவர்களும் நாமும் கையில் வைத்திருக்கும் இந்த வேத புத்தகத்தை மொழிபெயர்த்த **சீகன்பால்க்,வில்லியம்கேரி,Rev.குண்டர்** ஆகிய யாவரும் அந்நியபாஷை பேசவில்லையே?

இயேசுகிறிஸ்து கட்டளையிடாதது, சீஷர்கள் யாரும் உபதேசிக்காதது, வேதம் கூறாதது ஆகிய விவரங்கள் அறிந்தும் ஜனங்களை பரவசப்படுத்த ஜனங்களை ஏமாற்ற இவர்கள் பயன்படுத்தும் அந்நியபாஷை என்ற உபதேசம் நூற்றுக்கு நூறு பொய்யானது. ஆகவேதான் பொய்யில் உருவான **சபை பெந்தேகோஸ்தே சபை** என்கிறேன்.

## • அந்நியபாஷை பேசவில்லை:

**இரத்தசாட்சியாய் மரித்தவர்கள்** ஒருவரும் அந்நியபாஷை பேசவில்லையே? வேதத்தை மூல பாஷையிலிருந்து ஆராய்ந்து,அதற்கான அர்த்தம் கண்டுபிடித்து ஒவ்வொரு வார்த்தையாய் மொழிபெயர்த்த அந்த அற்புத தேவமனிதர்களாகிய மிஷனரிகளுக்கு **அந்நியபாஷை** என்பது உண்மையானால் அவர்கள் பேசி அவர்கள் அதை மக்களுக்கும் அறிவித்திருக்கமாட்டார்களா?.இவர்களுக்கு மட்டும் எங்கிருந்து இந்த உபதேசம் உதித்தது. இதுதான் **பிசாசின் உபதேசம்** என்பது.

## அந்நியபாஷை பேசிவில்லையாளால் அங்கத்தினன் அல்ல:

இப்படி ஒரு சட்டம் இயற்றி **அந்நியபாஷை பேசாதவன் சபையின் அங்கத்தினானாக** கருதப்படமாட்டான். அசம்பளிஸ் ஆப் காட் வேதாகம கல்லூரியின் விண்ணப்ப படிவத்தில் அந்நியபாஷை அடையாளம் இருந்தால் மட்டும் அவர்களுடைய வேதாகம பள்ளியில் சேரலாம்.

AOG சபை தொடங்கிய நாளிலிருந்தே அந்த சபையின் அங்கத்தினராக இருந்த இரண்டு தலைமுறை குடும்பம் ஒன்று எனக்கு தெரியும். அந்த குடும்பத்தில் பிறந்த பையன் ஒருவனுக்கு **கீ போர்ட்** வாசிக்க விசேஷ பயிற்சியாளரிடம் அனுப்பி கீ போர்ட் வாசிப்பதில் சிறந்தவானகிவிட்டார். உடனே AOG சபை பாஸ்டரிடம் சபையில் பாடல்வேளையில் மகனை கீ போர்ட் வாசிக்க அவனுடைய தகப்பனார் கேட்டுக்கொண்டார்.

இரண்டு வாரங்கள் அந்த வாலிபன் ஆராதனையில் வாசித்தான். யாவருக்கும் அவன் வாசிப்பது பிடித்துவிட்டது. ஒரு நாள் அவனை வாலிபர் கூட்டத்தில் சாட்சி கூற பாஸ்டர் கேட்டுக்கொண்டார். தன் இரட்சிப்பை மனந்திரும்புதலை சாட்சியாக கூறினான். சனிக்கிழமை இரவு அந்த பையன் வீட்டுக்கு பாஸ்டர் வந்து அவன் தகப்பனரிடம் பையனின் சாட்சியில் மனந்திரும்புதலைப்பற்றி சொன்னதை கேட்டேன்.

ஆனால் ஆவியின் அபிஷேகம், அந்நியபாஷை ஆகியவைகளைப்பற்றி அவன் எதையும் கூறவில்லை என்றார். அதற்கு தகப்பனர் ஆம் அவன் இன்னும் அபிஷேகம் பெறவில்லை என்றார். அதாவது அவன் அந்நியபாஷை பேசும் அனுபவம் இல்லை என்றார். உடனே பாஸ்டர் அப்படியானால் நாளை முதல் அவன் சபையில் கீ போர்ட் வாசிக்க வேண்டாம் என்று சொல்வதற்காகவே வந்தேன் என்றார். பையன் நொடிந்துப்போனான். மனதில் வெறுப்பு தோன்றியது. அப்பா, பையனிடம் கூறினார். நீ இன்னும் விளையாட்டுபோக்காகவே வாழ்க்கையை நடத்துகிறாய்.

சீக்கிரம் **நீ அந்நியபாஷையில்** பேசவேண்டும் என்று எத்தனைமுறை உன்னிடம் கூறினேன். நீ செவி சாய்க்கவில்லை என்று ஏசினார். இப்போது மகன் உள்ளத்தில் வெறுப்பு உண்டானது. சில வாரங்கள் கடந்தபோது வீட்டில் குடும்ப ஜெபத்தில் எல்லாரும் ஸ்தோத்திரம் கூறி எதிர்பாராத வண்ணம் அந்நியபாஷையில் பேசி முடித்தான். பெற்றோர்களுக்கு மிகுந்த சந்தோஷம்.

மறு ஞாயிறு ஆராதனை முடிந்தபின் பாஸ்டரிடம் தன் மகனுக்கு அபிஷேகம் கிடைத்துவிட்டது என்று கூறினார். பாஸ்டரும் சந்தோஷப்பட்டார்.

ஆராதனை முடிந்தபின் எல்லாருக்கும் பாஸ்டர் வழமையாக ஜெபிக்கும்போது இவருடைய மகனுக்காகவும் தலையில் கை வைத்து ஜெபிக்க மகன் சரளமாக அந்நியபாஷை பேசினான். துள்ளவும் செய்தான். மறுவாரமே அவனை கீ போர்ட் வாசிக்க சொல்லிவிட்டார்.

ஏறக்குறைய 7 வருடங்கள் தொடர்ந்து சபையில் கீ போர்ட் வாசித்தான். வெளிநாட்டில் அவனுக்கு வேலை கிடைத்தது. அநேக வருடங்களுக்கு முன் அவன் வேலை செய்த நாட்டிலே என் பிரசங்கம் நடைபெற்றது. அதில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றியும், போலியான அந்நியபாஷை பற்றியும் பேசினேன். அன்று அவன் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தான். பகல் வேளை ஆலோசனை நேரத்தில் தனிமையில் என்னை சந்தித்தான். நேற்று நீங்கள் பேசிய செய்தியில் நான் மனந்திரும்பினேன். ஆனால் உள்ளத்தில் ஒரு குற்றஉணர்ச்சி உண்டு. நான் AOG சபையை சேர்ந்தவன் என்று தன் சபையில் கீ போர்ட் வாசிக்கவிடாமல் பாஸ்டர் தன்னை ஒதுக்கின விஷயத்தையும்,அதன்பின் அந்நியபாஷை பேசினபின் கீ போர்ட் வாசிக்க அனுமதிக்கப்பட்ட விஷயத்தையும் கூறினான். அப்படி அதைக்குறித்து என்னிடம் விளக்கும்போது அன்று அந்நியபாஷை பேசினது போலியானது பொய்யானது. கீ போர்ட் வாசிக்கும் ஆர்வத்தில் **அந்நியபாஷையில் பொய் பேசி நடித்தேன்**. அப்பா நம்பிவிட்டார். என் சபை பாஸ்டரும் நம்பிவிட்டார். என் ஆசையும் நிறைவேறினது.

ஆனால் நேற்று நீங்கள் பேசின **போலி வாழ்க்கை** என்ற தலைப்பின் செய்தி என்னை தொட்டது. பரிசுத்த ஆவியானவரை ஏமாற்றும் விதத்தில் **கீ போர்ட்** வாசிக்கும் ஆர்வத்தில் பாஸ்டரை திருப்திப்படுத்த பேசின அந்நியபாஷையால் இம்மையிலும், மறுமையிலும் மன்னிப்பு கிடைக்காமல் போகும். இப்போதும் நான் என் சபைக்கு போனால் போலியான அந்நியபாஷை பாஷைதான் பேசுகிறேன் என்று வருந்தினான். நான் அவனுக்கு வசனத்தை சுட்டிக்காட்டி உன் பாஸ்டர் பேசும் பாஷையே பொய்யானது. உன் அப்பா பேசுவதும் பொய்யானது என்று உனக்கு தெரியுமா? என்றேன் தெரியும். எனக்கு மட்டுமல்ல சபைக்கு வரும் என் காலேஜ் நண்பர்களும் பாஸ்டர் பேசும் பாஷையை டேப்ரெக்கர்ட்டில் பதிவுசெய்து வீட்டில் போட்டு சிரிப்போம். அன்றே எங்கள் பாஸ்டர் தன் வாழ்க்கையிலேயே இத்தனை பெரிய **பொய் பாஷை** பேசி சபை ஜனங்களை பொய்யான பாஷையை பேச வைக்கிறாரே என்று அன்றே நாங்கள் பேசிக்கொள்வோம். **அந்நியபாஷை** பேசினால்தான் சபை ஆராதனையில் கீ போர்ட் வாசிக்கமுடியும் என்று கூறியபோது என் வாய்க்கு வந்ததை பாஸ்டர் வழக்கமாக உளருவதை மனதில் பதிய வைத்திருந்தேன். அவர் பேசுவதைப்போல நடித்த என் நடிப்பின் உளரலை அவர் நம்பிவிட்டார். அன்றே என் சபையின்மீது இருந்த நம்பிக்கை போய் என் சபையின் பல செயல்பாடுகளில் உள்ள **போலியை** அறிந்து மனதில் வேதனைக்கொண்டேன் என்றான். அந்த வாலிபன் திருமணமாகி பிள்ளைகளை பெற்றெடுத்து இன்னும் AOG சபைக்கு போகிறான். ஆனால் அவன் சொன்னான், இப்போதெல்லாம் சபை விசுவாசிகள் பார்க்கதக்கதாக அந்நியபாஷைகளை பேசி நடித்துக்கொண்டிருந்தேன். உங்கள் ஆலோசனைக்கு பிறகு நான் AOG சபையை விடவில்லை. ஆனால் இப்போதெல்லாம் நான் யாருக்காகவும் **அந்நியபாஷையை** பேசி நடிப்பதில்லை. என் பிள்ளைகளுக்கு அந்நியபாஷைகளைக்குறித்து உங்கள் உபதேசத்தைக்குறித்து கூறி வசனத்தில் அதை சுட்டிக்காட்டி **அந்நியபாஷை** என்பது போலியானது என்று எச்சரித்து வைத்துதான் AOG ஆரானைக்கு குடும்பமாக போகிறோம்.

இதை வாசிக்கிற நீங்கள் பெந்தேகோஸ்தே சபை விசுவாசியாக இருந்தால் டேப்ரிக்கார்ட்மூலம் அன்று அந்த வாலிபன் **தன் சபையில் பேசிய அந்நியபாஷையை** பதிவு செய்தான். இன்று உங்கள் கையில் மொபைல் உண்டு. முதலில் உங்கள் பாஸ்டர் பேசும் அந்நியபாஷையை தொடர்ந்து பல வாரங்கள் பதிவு செய்யுங்கள். அதன் பின் அதை போட்டு கேட்டுப்பாருங்கள். சொன்னதையே மீண்டும் சொல்லி உளருவதை கேட்கலாம். **க்ரபலா...... சுக்கரபலா.... சங்கரபலா** இதையே பல வருடமாக அவர்கள் பேசிக்கொண்டிருப்பதை அறியலாம்.

**சகோ.மோகன் சி.லாசரஸ்** அந்நியபாஷையில் **பிசாசை** விரட்டுவதை பதிவு செய்திருக்கிறார்கள். அந்நியபாஷையில் பிசாசை விரட்டி ஜெபிப்போம் என்று வெளிப்படையாகவே அவர் கூறிவிட்டு **ஷாரா-கிப்ரா** என்று என்னென்னவோ உளறிவிட்டு நடுநடுவே Go போ என்று சத்தமாக பிசாசை விரட்டுவதை அதில் கேட்கலாம். அவர் விரட்டின பிசாசுக்கும் பல பாஷைகள் தெரியும்போலும். இவர் உளருவதையும் அந்த பிசாசு கேட்கிறதாம்-அப்படியே மோகன் சி.லாசரஸ் பேசும் அந்நியாபஷையை பிசாசு விளங்கிக்கொள்கிறதாம். அந்த பிசாசு **ஆங்கிலமும் தெரிந்த பிசாசு**போல இருக்கிறது. அதனால் தான் மோகன்.சி.லாசரஸ் Go - போ என்று ஆங்கில வார்த்தையை அவர் நடுநடுவே உபயோக்கிறார். இதை வாசிக்கும் போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?.

இவர்கள் கள்ளஉபதேசத்தின்படி அந்நியபாஷை என்ற பெயரில் இவர்கள் உளருவது **ஆண்டவருக்கும்** விளங்குகிறது, **பிசாசுக்கும்** விளங்குகிறது எப்படி? அவர்கள் இப்படி கன்னாபின்னா என்று இஷ்டத்துக்கு உளருவதை கேட்க சகிக்காமல்தான் அந்த **பிசாசு** ஓடியிருக்க வும் வாய்ப்புண்டு என்று நினைக்க தோன்றுகிறதல்லவா!.

எத்தனை பெரிய ஏமாற்றுதனம் இது!. இதை நம்புவதற்கு படித்த முட்டாள்கள் பெருவிட்டனரே!. அதை யோசிக்கும்போது தான் மனதுக்குள் வேதனை உண்டாகிறது.

## அந்நியபாஷையின் கிளை கிரியைகள்:

### அந்நியபாஷை என்ற பொய்யில் பிறந்தது தான்

### ஜெபத்தில் பெயர் அழைப்பது.

' **யார் அந்த மனோகரன்?** டிவியில் என் முன் சோர்வோடு உட்கார்ந்திருக்கிறதை கர்த்தர் எனக்கு காட்டுகிறரே என்று இவர்கள் கூறியது பொய் என்று உறுதியானது. காரணம் அதே காட்சியை இரண்டு முறை டிவியில் காண்பித்ததால் இவர்கள் 6 மாதத்துக்குமுன் டிவிக்காக பதிவு செய்ததை மறுபடியும் இரண்டு அல்லது மூன்று முறை ஒளிப்பரப்பியதால் இவர்கள் ஜெபத்தில் பெயர் அழைப்பது பொய் என்பது உறுதியானது.

' **எயிட்ஸ்** சுகமாவதை நான் காண்கிறேன் என்றார். மேலும் இவர் என் அருகேயுள்ள **இயேசு மேடையிலிருந்து** இறங்கி வருகிறார். **கோபால்** என்ற பெயருள்ள உன் தலையில் இயேசு கைவைப்பதை நான் காண்கிறேன் என்றார். அதோடு **எயிட்ஸ் வியாதி கிருமிகள்**

தலையிலிருந்து கால்வழியே பூமியில் இறங்கிப்போவதை காண்கிறேன். **நீ சுகமாகிவிட்டாய்** என்று சகோ.**மோகன்.சி.லாசரஸ்** சொன்ன அந்த சாட்சி பொய் என்பது **டாக்டர்களால்** உறுதி செய்யப்பட்டது. **சர்க்கரை வியாதி** பூரண சுகம் என்று கர்த்தர் சொல்கிறார் என்று கூறிய பல வியாதியஸ்தர்களைப்பற்றி கூறிய தீர்க்கதரிசனமும் அவர்கள் மேடையில் கூறிய சாட்சியும் பொய் என்பது நூற்றுக்குநூறு உறுதியானது.

## கீழே விழுவது - அந்நியபாஷை பேசி சிரிப்பது:

' கை நீட்டினால் **கீழே விழுவது** விரல் நீட்டினால் **கீழே விழுவது, ஊதினால் விழுவது** போன்ற **பொய்யான காட்சிகள்** யாவற்றுக்கும் ஆரம்பம் பொய்யான **அந்நியபாஷை** தான்.

' ஆவியில் நிறைந்து **அந்நியபாஷை** பேசி சிரிப்பது போன்ற பைத்தியங்கள் பெரிய ஊழியர்களாக டிவியில் காணப்படுகிறார்களே!.

' இப்படி பல **பொய் சாட்சிகளின்** ஆரம்பம். பொய்யான **அந்நியபாஷை** பேசும் பெந்தேகோஸ்தே சபையினரால் உருவானது ஆகும். இப்போது **பெந்தேகோஸ்தே சபைகள்** வீதிக்கு 10 என்று வகையில் ஈசலைப்போல பெருகிவருகிறது. ஒருவன் சபையில் **பாட்டுபாடி** ஜனங்களை ஜெபத்தில் வழிநடத்த தெரிந்தால் போதும் ஜெபத்தில் மக்களை அழ வைத்தால் போதும். உடனே அவன் அந்த சபையை விட்டு பிரிந்து ஒரு **புதிய பெந்தேகோஸ்தே சபை** உருவாக்கி அவன் **ஒரு பாஸ்டர்** ஆகிவிடுகிறான். இவர்களுக்கு வேத ஞானம் வேண்டாம், ஜெபம் நடத்தவும் **பாடல் ஆராதனை** நடத்தவும் ஒருவனுக்கு தெரிந்தால் போதும். அவர்கள் யாவரும் **பெந்தேகோஸ்தே சபை** பாஸ்டர்களாகிவிடுகிறார்கள். அவர்கள் சபை மக்கள் **வசனத்தில் வழிநடத்தப்படாமல்** பாட்டில்மட்டும் வழி நடத்தப்படுகிறார்கள். பெரும்பாலான பெந்தேகோஸ்தே சபைகளில் உள்ள பாஸ்டர்மார்கள் யாவருக்கும் **வேத அறிவு இல்லாதவர்கள்.** காரணம் இவர்களில் பெரும்பலானவர்கள் **வேதகாம கல்லூரியில்** வேதம் படிக்காதவர்கள். இவர்கள் சபையில் **வெறும் சத்தமும், கூச்சலும், நடனமும், கைதட்டாலும்** இருக்குமே தவிர, வசனத்தில் வளர்த்தபடததால் சபை மக்கள் பரிதாபமாக காணப்படுகிறார்கள். கர்த்தரின் வருகைக்கு இப்படிப்பட்ட சபையில் உள்ள இவர்கள் எப்படி ஆயத்தப்படபோகிறார்கள். ஆகவே இன்றைக்கு பெரும்பாலான **பெந்தேகோஸ்தே சபைகளின்** பாஸ்டர்கள் தேவனின் நாமம் **தூஷிக்கப்படத்தக்கதாக** நடந்து தங்கள் சபைகளையும் சபை மக்களையும் அப்படியே நடத்துகிறார்கள்.

# அந்நியபாஷையின் சரித்திரம் ஆரம்பம்:

ஆதியிலேயே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார். அதன்பின் ஆதாமையும்,ஏவாளையும் ஆணும்,பெண்ணுமாக சிருஷ்டித்தார்.(ஆதி 2:7). இவர்கள் மூலமாக மனுஷ வர்க்கம் பெருகினது. அதன்பின் ஆதாமின் சந்ததியிலிருந்து வந்த **நோவாவின்** காலத்தில் மக்கள் மிகவும் பாவம் செய்து உலகைப் படைத்த ஆண்டவருக்கு

மனவேதனையை உண்டாக்கினார்கள். ஆதி 6:6. மக்களின் பாவம் சகிக்கமுடியாத அளவு பெருகினபடியால் கர்த்தர் தான் படைத்த பூமியை **மக்களோடு சேர்த்து அழிக்கும் அளவு கர்த்தர் கோபம் கொண்டார்.** ஆனால் கர்த்தருக்கு பிரியமாக நடந்துக்கொண்டு தெய்வ பயத்தோடு வாழ்ந்த **நோவா** என்பவரின் குடும்பத்தைமட்டும் உயிரோடு வைக்க கர்த்தர் சித்தங்கொண்டு ஒரு பெரிய கப்பலை கட்ட சொன்னார். அந்த குடும்பத்தோடு உலகில் உள்ள அனைத்து வகையான **பூமியில் வாழ்ந்த மிருகங்களையும், ஊர்வன, பறப்பன** போன்ற சகல **ஜீவன்களையும்** காப்பாற்ற தேவன் திட்டமிட்டு ஒவ்வொரு மிருகத்திலும்,பறவைகளிலும் மற்ற எல்லா ஜீவராசிகளிலும் ஆணும்-பெண்ணுமான ஜோடிகளை மட்டும் காப்பாற்ற சித்தம்கொண்டார். ஒரு பேழையை (கப்பலை) உண்டாக்க சொன்னார். நோவா பேழையை உண்டுபண்ணி முடித்தவுடன் அதில் மேலே குறிப்பிட்ட அனைத்து ஜீவராசிகளோடு **நோவா** குடும்பத்தையும் கப்பலுக்குள் ஏறிக்கொள்ளும்படி கூறிவிட்டு **கப்பலின் கதவை சாத்தினர்.** அதன்பின் பெரும்மழையை 40 நாட்கள் இரவும்-பகலும் பெய்யவைத்து, பூமி முழுவதையும் பெரு வெள்ளத்தால் அழித்தார். இதுதான் **உலகத்தின் முதல் அழிவு.**

**உலகத்தின் முதல் அழிவு தண்ணீரினால் அழிக்கப்பட்டது.**

**இரண்டாம் அழிவு அக்கினியினால் அழிக்க** இருப்பதாக வேத வசனம் தீர்க்கதரிசனமும்,**இயேசுகிறிஸ்துவும்** கூறினார். இரண்டாம் அழிவுக்குப்பின் உலகம் இருக்காது. அதுதான் கடைசி அழிவு ஆகும்.

இப்போது **பேழை** என்று அழைக்கப்படும் மிகப்பெரிய கப்பல் மூலம் நோவாவின் குடும்பம் மட்டும் காப்பாற்றப்பட்டு அவர்கள்மூலம் மக்கள் பலுகிபெருகி உலகை நிறைத்தார்கள். ஆனாலும் மக்கள் மறுபடியும் கர்த்தருக்கு கீழ்படியாமல் கர்த்தரின் மனதை மேலும் வேதனைப்பட வைத்தார்கள்.

அப்படி பலுகிபெருகின மக்கள் அன்று **பேசின பாஷை ஒரே பாஷையாகத்தான்** இருந்தது. ஆதி 11:1. **பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரே விதமான பேச்சும் இருந்தது** என்று வேதம் கூறுகிறது.

அந்த காலங்களில்தான் மக்கள் தங்களுக்கு பேர் உண்டாக, பெருமை உண்டாக வானத்தை எட்டும் அளவும் சிகரமுள்ள ஒரு **கோபுரத்தை** கட்டுவோம் என்று தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து வானளாவிய **கோபுரம்** பணியும் வேலை தொடங்கினார்கள். வானத்தை தொடும்அளவு கட்டிட வேலை உயர்ந்துவிட்டது. தாங்கள் செய்வதை யாரும் **தடை செய்யமுடியாது** என்ற இருமாப்பில் அம்மக்கள் இருந்தபோது ஆண்டவர் இவர்களின் முட்டாள்தனத்தையும், தங்களை யாரும் ஒன்றும் செய்யமுடியாது என்ற இருமாப்பையும் கண்டு இவர்கள் அனைவரும் **ஒரே பாஷை பேசும்** மக்களாக இருப்பதால்தானே! இந்த இருமாப்பு. ஆகவே அவர்கள் **பாஷையை** சிதறடிப்போம் என்று ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்துக்கொள்ளாதபடி **அவர்களின் பாஷையை தாறுமாறு** ஆக்குவோம் என்று ஒரே

நிமிடத்தில் அவர்கள் வாயில் பேசிய பாஷையை மாறிப்போக செய்துவிட்டார். உடனே மக்கள் பயந்துபோய் யார்?யார்? என்னென்ன **பாஷையை** பேசினார்களோ அவர்கள் **ஒன்றாக** இணைந்து உலகெங்கும் சிதறிடிக்கப்பட்டு ஓடிபோய் உலகின் பல பாகங்களில் குடியேறினார்கள்.

தேவனை நேசித்த தேவ பயமுள்ள குடும்பங்கள் மட்டும் **ஆபிரகாம்** காலத்திலிருந்து **யோசேப்பு** காலம்வரை சந்ததி சந்தியாக கர்த்தரையே சேவித்து வாழ்ந்தார்கள். அவர்கள் **இஸ்ரவேல் சந்ததி** என்று அழைக்கப்பட்டார்கள். **இஸ்ரவேல்** மக்கள் **யோசேப்பின்** ஆட்சியில் எகிப்தில் சீரும்-செழிப்புமாக வாழ்ந்தார்கள். யோசேப்பு மரித்தபின் எகிப்தில் யோசேப்பையும் தேவன் அவனோடுகூட இருந்து எகிப்து நாட்டையும் காப்பாற்றி நல் ஆட்சி புரிந்ததை அறியாத **புதிய ராஜா ஒருவன் எகிப்தில்** தோன்றினான்.யாத் 1:8 என்று எழுதப்பட்டுள்ளது. அந்த புதிய ராஜா காலத்தில் இஸ்ரவேல் மக்களை அதாவது **யூத மக்களை** அந்த ராஜா குடியுரிமை கொடுக்காமல் அடிமைகள் அந்தஸ்தில் பயங்கர கொடுமைப்படுத்தினான். காரணம் எகிப்து மக்களைவிட இஸ்ரவேல் மக்கள் மிக அதிகமாக பலுகிபெருகிவிட்டதை தன் ஆட்சிக்கு ஆபத்தை உண்டாக்குமோ என்று பயந்து இஸ்ரவேல் மக்களை மிகவும் கொடுமைப்படுத்தினான்.

அதன்பின் உள்ள சரித்திரத்தை வேதத்தில் வாசித்து அறிந்துக்கொள்ளுங்கள். எகிப்து அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் தான் நேசிக்கும் ஜனமாகிய இஸ்ரவேல் மக்கள் மனந்திரும்பி கர்த்தரிடம் விண்ணபித்தபடியால் கர்த்தர் மோசேயை எழுப்பி எகிப்து அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவித்து செழிப்புள்ள கானன் தேசத்துக்கு 40 வருடங்கள் கால்நடையாக வழிநடத்தி கொண்டுவந்து சேர்த்தார்.

மோசேக்குபின், ஆரோன்,யோசுவா இப்படி பலர் மக்களை வழி நடத்தினார்கள் என்றாலும் மக்களின் **முரட்டாட்டம்** கர்த்தருக்கு கீழ்படியாததன்மை மீண்டும் தலை தூக்கியது.

**நியாதிபதிகள் காலம்:** மக்கள் மறுபடியும் கர்த்தரின் மனதை வேதனைப்படுத்தி அவர்களுக்குள் கலகம் உண்டானதால் நியாதிபதிகளின் காலம் உண்டானது. பல நியாதிபதிகள் ஒருவர்பின் ஒருவராக இஸ்ரவேல் மக்கள் நியாயம் விசாரித்து நடத்தினார்கள். என்றாலும் நியாதிபதிகளும் பாவம் செய்து மக்களைப்போல் கர்த்தருக்கு கீழ்படியாமல் போனார்கள்.

அந்த காலத்தில் அவனவன் தன் பார்வைக்கு சரிப்போனப்படி செய்து வந்தார்கள் என்று வேதம் கூறுகிறது. நியா 21:25.

**இராஜாக்கள் காலம்:** தங்களுக்கு இனி நியாதிபதிகள் வேண்டாம் எங்களை ஆள இராஜாக்கள் தான் வேண்டும் என்று கர்த்தரிடம் மக்கள் முரட்டாட்டம் செய்தார்கள். அதன்படி **இஸ்ரவேல்** மக்களை ஆள முதல் இராஜாவாக கர்த்தர் **சவுலை** ஏற்பாடு செய்தார். அதன்பின் தொடர்ந்து வந்த ராஜாக்கள் சரித்திரத்தை நீங்கள் வேதத்தில் வாசித்து தெரிந்துக் கொள்ளுங்கள்.

**தீர்க்கதரிசிகளின் காலம்:** இராஜாக்களும் கர்த்தருக்கு கீழ்படியாமல்போக மக்களின் பாவமும் மேலும் பெருகினது.

கர்த்தர் பல தீர்க்கதரிசிகளை எழுப்பி இராஜாக்களையும், மக்களையும் எச்சரித்தார். மக்கள் திருந்தவில்லை. கர்த்தர் அனுப்பிய தீர்க்கதரிசிகளையம் மக்கள் கொன்றார்கள். இதற்குமேல் இந்த மக்களை விட்டுவைப்பதில் அர்த்தமில்லை.

ஆகவே மக்கள் முழுவதையும் அழிக்க இந்த முறை **தண்ணீரால் அழிக்காமல் அக்கினியினால் அழிப்பது** என்று தீர்மானித்தார்.

**இயேசுகிறிஸ்துவின் காலம்:** ஆண்டவர் கோபம் பற்றி எரிந்தது. என்றாலும் தான் உண்டாக்கின மனிதர்களை **தானே அழிக்கப்போவதை** நினைத்து மனம் இறங்கி மக்களுக்கு கடைசி சந்தர்ப்பமாக ஒரு ஏற்பாட்டை செய்தார். உலக மக்களின் பாவம் கழுவபடி **பாவமன்னிப்பை** பெற்று இந்த உலகத்திலேயே பரலோக சந்தோஷத்தை அனுபவிக்க ஏற்படுத்திய திட்டம்தான்.

**பாவமன்னிப்புக்கு பரிசுத்த இரத்தம் சிந்தப்படுவது: இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பு இல்லை.** எபி 9:22 என்ற அடிப்படையில் பரலோகத்திலிருந்து **மேசியாவையே** இயேசு கிறிஸ்துவாக **மரிப்பதற்கென்றே மனிதனாக ஊழியம்** செய்து, தன்னை மக்களுக்கு வெளிப்படுத்தி **பிதாவின் சித்தத்தையும், திட்டத்தையும்** அறிவித்தார். ஆனால் மக்களோ அவரை **மேசியாவாக** ஏற்றுக்கொள்ளவில்லை. பிதா தம் திட்டப்படி அனுப்பிய மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவையே சிலுவையில் அறைந்தார்கள். இரத்தம் சிந்தப்பட்டது. அதன்பின் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு **3ம் நாள் உயிரோடு** எழுந்து உயிருள்ளவராக இருப்பதை பலருக்கும் நிரூபித்து, **பரமேறி பரலோகம்** சென்றார். இப்போது **இயேசுவின் இரத்தத்தை** நம்பினவர்களுக்கெல்லாம் **பாவமன்னிப்பு** கிடைத்தது.

**(இதன் தொடர்ச்சி அடுத்த ஜாமக்காரனில் தொடரும்..........)**

## கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் **கிறிஸ்தவசபைகள்** தாக்கப்படுகின்றன. **சபை ஊழியர்கள், மிஷனரிகள்** தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, **மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள்** என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும், விசுவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும், சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில்செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து **UNITED CHRISTIAN FORUM** என்ற பெயரில் **உதவி இணைப்பு** Help Line தொடங்கியுள்ளார்கள். உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் **1800 2084 545** என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.

## MUMBAI- BOROVALI METHODIST CHURCH-CONVENTION






மும்பை Borovali மெத்தடிஸ்ட் சர்ச் ஆராதனை **Rev.புஷ்பராஜ்** அவர்களின் முயற்சியால் அவரின் ஆவிக்குரிய ஆவலின்படி இந்த ஆலயத்திலும் நடந்த கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. அதிக நேரம் பேச அவர்களே கேட்டுக்கொண்டது ஆயர்,சபை மக்களின் ஆவிக்குரிய வாஞ்சையை அறிய முடிந்தது. இங்கும் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது.

# KANYAKUMARI CSI DIOCESE POOVANCODE CHURCH CONVENTION





பூவன்கோடு CSI சபையின் **சபை நாள் நினைவு** ஸ்தோத்திர கூட்டம் சிறப்பாக அமைந்தது. முன்னாள் பிஷப் **Rt.Rev.தேவகடாட்சம்** அவர்கள் ஞாயிறு சிறப்பு ஆராதனையும் திருவிருந்து ஆராதனையும் நடத்தி வைத்தார். 3 நாட்கள் நடந்த சிறப்பு கன்வென்ஷன் கூட்டத்தில் தேவ செய்தியளித்தேன். நான்காவது முறையாக இந்த சபையில் பகிர்ந்துகொண்டது சந்தோஷம். Rev.S.ரிங்கிள் ஜெயகுமார்(சேகர போதகர்) சகோ.D.சமீலன் உதவி போதகர் செயலரும், காரக்கோணம் மெடிக்கல் காலேஜ் விரிவுரையாளருமான Dr.Blessed Singh.,MD., அவர்களும் கூட்ட ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். கர்த்தரின் நாமம் மகிமைப்பட்டது.

## முதல் மிஷனரி பிஷப்:

FMPB ஜெபக்குழு தலைவர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மிஷனரிகள் தங்கள் ஊழியத்தில் அனுபவித்த கஷ்டங்களின் பலனாக மால்தோ இனமக்களின் மிஷனரி பணிதளத்தில் FMPBஊழியத்தின் 50வருட பலனாக மால்தோஆதிவாசி ஒருவர் முதல் பிஷப்பாக உருவாகியிருக்கிறார் என்பது இந்திய சரித்திரத்தில் பதியபடவேண்டியது ஆகும். ஆதிவாசிகள் மத்தியில் இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொண்டு அதன்மூலம் சபை உருவாகி அந்த சபையின் அங்கத்தினனாகி, அவர்களில் ஒருவர் சுவார்த்திக் (சுதேச) மிஷனரியாக மாறி, அவரே அந்த மிஷனரி சபைக்கு ஆயராக பொருப்பேற்று இன்று ஆதிவாசி இன மக்களை வழிநடத்தும் பிஷப்பாக உருவெடுத்தவர்தான் **Rt.Rev.பத்ரஸ்** அவர்களாகும்.

மால்தோ இன ஆதிவாசிகள் சபைகள் ஒன்றாக இணைந்து மால்தோ டையோசிஸ்லாக உருபெற்றது. இச்சரித்திர சம்பவம் FMPBயின் சகல மிஷனரிகளுக்கும்,மிஷனரி தலைவர்களுக்கும் FMPB ஸ்தானத்துக்கும் மிக பெரிய பெருமையாகும். ஆதிவாசி மிஷனரி சபைகளின் ஸ்தாபனமான FMPB மிஷனரிகளின் 50வருட உழைப்பின் பலனாக கிடைத்த பிஷப் **Rt.Rev.பத்ரஸ்** அவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்-வரவேற்கிறோம். இதற்காக 50வருடங்கள் உழைத்த அத்தனை FMPB மிஷனரிகளை என் தனிப்பட்டமுறையில் மனமாற வாழ்த்துகிறேன். இந்த குறிப்பிட்ட பணிதளத்தில் உழைத்த மிஷனரிகளுக்கு விசேஷமாக நான் தலைவணங்கி வாழ்த்துகூறுகிறேன். (நிச்சயம் இவர்கள்மூலம் பரலோகம் சந்தோஷப்படும்)



**APRIL 2016**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.